ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:



ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வான் 'வித்வந்மணி' 'வேதாந்த வாவதூக'

ஸ்ரீ-உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமியின்

சரிதைச் சுருக்கம்

[வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்யன்,
ஒப்பிலியப்பன் ஸந்நிதி]

1. முன்னுரை

பரமைகாந்தி ஸார்வபௌமராய் ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்ய ஸம்பந்நராய்ப் பிரகாசித்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்துக்குப் பெருந்தொண்டு புரிந்து எம்பெருமானார் தர்சனத்துக்குப் பாதுகாப்பாளராய் விளங்கிய ஸ்ரீ உப வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமியின் அற்புதப் படைப்பான பரமதபங்க வ்யாக்யாநப் பதிப்பில் இடம் பெறும்படி அந்த மஹாபுருஷரின் சரிதைச் சுருக்கத்தை வரைந்து தருமாறு பரமாப்தரின் நியமனத்தை முடிமேல் தாங்கிச் சிற்றறிவினனான அடியேன் இம்முயற்சியில் ஈடுபடுகின்றேன். கட்டுரை எப்படி அமைந்தாலும் மஹாபாகவத நியமநத்தைத் தலைக்கட்டியதாக அடியேன் திருப்திபெறுவதில் குற்றமில்லையே !

2. பரமைகாந்திகள் யார் ?

நம் தர்சநத்தில் பரமைகாந்தியெனும் சொல் தொன்று தொட்டு வழங்கி வருகின்றது. நல்ல ஆசார சீலனாய் வைதிக கர்மங்களைச் சாஸ்த்ர விதிப்படி நடத்தி வருபவனை இச்சொல் குறிப்பிடுவதாகக் கூறுவது நாட்டாரின் பேச்சு. உண்மைப் பொருள் வேறு. ஸர்வேசுவரனான ஸ்ரீமந்நாராயணனையே பரதேவதையாகக் கொண்டு வேறு தெய்வத்தை உள்ளத்தாலும் சிந்தியாதவர்கள் ஏகாந்திகள். அவனிடமும் மோக்ஷத்தையன்றி வேறு பயனை நாடாதவர்கள் பரமைகாந்திகள். இங்கு உள்ள காலம் பகவத் கைங்கர்யங்களை வேறு பயனை நாடாது செய்து மோக்ஷத்தையும் அதற்குப் பலனைக் கருதாமல் பகவத் குணானுபவத்திலேயே மண்டியிருப்பவர்கள் பதினாறு மாற்றுப் பொன் போன்ற பரமைகாந்திகள். இந்தப் பாகுபாடு ஸ்ரீ தேசிகன் கண்டு நமக்கு விளக்கியது.

3. நல்லோர் வாழ்வதற்கு உரிய இடம் எது?

இத்தகைய பரமைகாந்திகள் இச்சரீரம் உள்ளவரையில் இங்குக் கைங்கர்யம் செய்துகொண்டு வாழ்வதற்கு உரிய இடத்தைச் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. தார்மிகர்கள் வசிப்பதற்கு இடமாய்க் கூறிய ஆர்யாவர்த்தம் முதலிய புண்ய பூமிகள் இக்கலியுகத்தில் விபரீதர்களின் கையில் அகப்பட்டு ஸாத்துவிகர்கள் வசிப்பதற்குப் பொருந்தாதவையாயின. இப்பொழுது கைங்கர்யம் செய்துகொண்டு வாழ்வதற்கு உரிய இடத்தைத் தேடும்போது பாகவதர்கள் உறையும் இடங்களே மிக மேம்பட்டன வென்று சாஸ்த்ரங்களே முடிவு கூறிவிட்டன. 'இங்குத் திருவரங்கத்திலேயே உன் சரீரம் கழியும்வரை ஸுகமாக வாழ்ந்திடு' என்பது பெரியபெருமாள் சரண மடைந்த சேதநனுக்கு விதித்த அருள்மொழி. இவ்வுரை எம்பெருமான் ஏழுந்தருளி யுள்ள மற்ற தலங்களையும் குறிப்பினால் உணர்த்துவது ஆசார்யர்கள் கொண்டுள்ள முடிவு. புண்ணியத்தலம்–திவ்ய தேசம் என்ற சிந்தனையெல்லாம் விட்டுப் பரமை காந்திகளான பாகவதர்கள் வாழும் சிறப்பையே முக்கியமாகக் கொண்டு அத்தகைய இடங்களில் எம்பெருமானுக்கும் அவனடியார்களுக்கும் இயன்ற கைங்கர்யங்களைச் செய்துகொண்டு வாழ்வதுவே சிறக்கும். இவையெல்லாம் நம் தேசிகன் கண்டு உரைத்த உண்மை.

4. தொண்டை நாட்டின் சிறப்பு

நம் தர்சனத்துக்குப் பழைய மூல புருஷர்களான முதலாழ்வார்களையும் ப்ரதான ஆசார்யர்களான எம்பெருமானரையும் ஸ்ரீ தேசிகனையும் அவதரிப்பித்த தனிப் பெருமையைத் தொண்டை நாடு பெற்றுவிட்டது. வேத வேதாந்தங்களை ஓதிய அந்தணப் பெருமக்களைத் தொண்டைமண்டலத்தில் மற்ற நாட்டினும் மிகுதியாகக் காணலாம். தேசிகன் தாமே 'தொண்டைமண்டல வேதிய' ரென அவர்களைப் பற்றிப் பெருமையாகக் கூறுகின்றார். அது ஸ்வாமியின் ஸ்வதேசாபிமானத்தின் விளைவாகவும் இருக்கலாம். நாம் ஆக்ஷேபிப்பதற்கு இடமில்லையே! நம் தர்சனத்துக்கு வழிகாட்டிய நாதமுனிகள் – ஆளவந்தார் – மற்ற ஆழ்வார்கள் இவர்களை அவதரிப்பித்ததைக் கொண்டே சோழநாடு திருப்திபெறலாமே!

5. பழவேரி கிராமத்தின் சிறப்பு

வைதிகர்களின் ஆசார அநுஷ்டாநங்களுக்கும் ஏகாந்த வாஸத்துக்கும் சிறந்த இடம் பழவேரி ஸ்ரீ கிராமம். சாஸ்த்ர முறைப்படி வேதத்தை ஓதி வேதாந்த வித்யையிலும் தேர்ச்சி பெற்றுப் பகவதநுபவத்திலே ஆழ்ந்துகிடப்பவர்களாய் ஸாத்துவிகத் தன்மையராய்ப் பல மஹான்கள் வாழ்ந்த இடமென்று இக்கிராமத்தில் பெருமதிப்புக்கொண்டு பல ஆஸ்திகர்கள் இவ்வூரையே தமக்கு வாழ்விடமாகக் கொள்ள முற்பட்டனர். இவ்வூரில் நிலையாக வாழ்ந்து வந்த பெரியோர்களுள் பரம்பரையாய்ச் சுரோத்திரியர்களாகவே நடையாடும் ஓர் உயர்குடும்பத்தில்

ஸ்ரீ உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமிக்கும் இந்த ஸ்வாமியின் தர்மபத்நியான பரம ஸாத்வி ரங்கநாயகிக்கும் முந்திய அருந்தவப் புதல்வராய்ப் பிறந்தார் இந்தச் சரிதைத் தலைவரான நாராயணாசார்ய ஸ்வாமி.

6. வில்லிவலத்தில் ஸ்வாமியின் தோற்றம்

அருகே உள்ள வில்லிவலம் என்னும் ஸ்ரீ கிராமமும் பெரியோர்கள் வாழும் சிறப்புற்று விளங்குவது. பழவேரி கிராமத்தின் பெருமையில் அழுக்காறு கொண்ட இந்த ஸ்ரீ கிராமம் இந்தச் சரிதைத் தலைவரின் அவதாரத்துக்குத் தன்னை இடமாக்கிக் கொண்டு அப்பெருமையைத் தான் கவர்ந்துகொண்டது. இது மட்டுமோ? பரம்பரையாய் வந்த உரிய கிராமத்தை மறக்கச் செய்து தன்னையே ஸ்வாமிக்கு அடைமொழியாக்கிக்கொண்டு 'வில்லிவலம் ஸ்வாமி' என்றே வழங்கச் செய்து விட்டது. பழவேரி கிராமம் எப்படியும் மூலஸ்தானம் தான்தானே என்ற உணர்ச்சியை மட்டும் கொண்டு திருப்தி பெறவேண்டியிருந்தது.

7. சரிதைத் தலைவரின் இளம்பருவம்

வில்லிவலம் ஸ்வாமியின் தோற்றம் நள ஆண்டில் ஆடி மாதத்தின் பூராடத் திருநன்னாளில். இந்நிலவுலகில் அவதரித்த முதல் ஆசார்யனை நம்மாழ்வாருக்கும் ஆசார்யனை ஸேனை முதலியார் அவதரித்த பெருமையுள்ள திருநட்சத்திரம் தானே ஸ்வாமிக்கும் ஜன்ம நட்சத்திரமாக அமைந்தது! இதுவும் ஸ்வாமி செய்யப்போகும் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனத்துக்கு ஓர் அறிகுறியோ? லௌகிக முறையில் பார்க்கும் போதும் இந்நாளுக்கு ஒரு விசேஷம் அமைந்துள்ளது. ஆங்கில ஆண்டு 1916-ல் ஆகஸ்டு-மீ 15ஆ தான் ஸ்வாமியின் தோற்றம். பின்னால் பாரதத்துக்கு வரப்போகும் சுதந்திரத்துக்கும் ஆண்டுதோறும் இந்த ஸ்வாமியின் ஆங்கில முறை தோற்ற நாளைத் தேசிய விழாவாகக் கொண்டாடப்போகும் சிறப்புக்கும் இது ஒரு சின்னமோ? ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் நல்லான் சக்கரவர்த்தி எனும் சிறப்புப் பெயரோடு விளங்கும் திருக்குலத்திற்கு இந்த ஸ்வாமியின் தோற்றத்தாலும் வரும் சிறப்புக்கு வியப்பதற்கில்லை. பரம வைதிக ஸந்ததியில் தோன்றிய இவருக்குச் சாஸ்த்ர முறை தவறாது உரிய காலங்களில் உபநயனம் வரை உள்ள வைதிக ஸம்ஸ்காரங்கள் நடந்ததைக் குறிப்பிட்டுக் கூறவேண்டிய அவசியமில்லை. நாற்பத் தொன்றாவது ஆஸ்தானத்தை அலங்கரித்த ஸ்ரீமத் அழகியசிங்கர் திருக்கையால் திருவாழி திருச்சங்குகள் பொறிக்கப் பெற்று மந்த்ர உபதேசமும் பெற்றார் இவ்விளைஞர்.

8. கல்வி பயிலல்

நம் இளைஞரின் திரு தகப்பனாரே சிறந்த ஞானம் பெற்று விளங்கியமையால் தம் தந்தையிடமே வித்யாபயாஸம் செய்யத் தொடங்கினார். உயர்ந்த ஸம்ப்ரதாய முறையோடு சிறந்த ஆசார்யர்களை அண்டி அவர்கள் கடாக்ஷத்தாலே தெளிவான

ஞானம் பெற்ற திருத்தகப்பனாரிடமே அப்பொழுதைக்குரிய அடிப்படையான வித்யையை அப்யஸித்தார். அக்காலத்தில் முழுமையாக வேதத்தை ஓதிக் கற்க வாய்ப்பு இல்லாத வைதிக குலச் சிறுவர்களுக்கும் முக்கியமான வேதப் பகுதிகளை யாவது ஓதுவிப்பது வழக்கம். அவ்வாறே அவசியமான அளவுக்கு வேதாத்யயனமும் நடைபெற்றது நம் இளைஞருக்கு.

9. தர்க்க சாஸ்த்ரப் பயிற்சி

நம் இளைஞருக்கு முக்கியக் குறிக்கோள் வேதாந்த காலக்ஷேபம். அதற்கு முழுத் தகுதி பெற முக்கிய ஸாதனமாகிய ந்யாய சாஸ்த்ரப் பயிற்சியில் இவரது உள்ளம் சென்றது. மஹா வித்வான்களான உபாத்யாயர்களைக் கொண்ட திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவர ஸம்ஸ்க்ருத கலாசாலையில் நம் இளைஞரை வித்யார்த்தியாகச் சேர்த்துக்கொண்டான் திருமலையப்பன். தர்க்க சாஸ்த்ரப் பயிற்சி முழுமையான ஆர்வத்துடன் நடைபெறுகின்றது. இவருக்கு ஆசிரியராக அமைந்தவர்கள் மஹா வித்வான்களான புரிசை அநந்தாண்பிள்ளை ஸ்ரீ உப. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, அபிநவ தேசிக உத்தமூர் ஸ்ரீ உப. வீரராகவாசார்ய ஸ்வாமி, திருவரங்கம் ஸ்ரீ உப. திருமலை தாதாசார்ய ஸ்வாமி முதலியவர்கள். இன்னும் வேறு யார் வேண்டும்? மிக்க சிரத்தையுடன் புத்திமான்களான சிஷ்யர்களைப் பெறுவது ஆசார்யர்களுக்குப் பெரும் பேறென்பர். இந்தச் சிஷ்யரின் அறிவுத் திறனையும் பயில்வதில் ஆர்வத்தையும் கண்டு வியந்தனர் ஆசிரியர்கள். சிஷ்யர்கள் தமக்காகத் தாம் ஞானத்தைப் பெறுவதையே முக்கியமாய்க் கொள்வது உலக முறை. இந்தச் சிஷ்யரோ விஷயங்களை க்ரஹிக்கும்போதே தமக்கு மட்டுமின்றிப் பிறருக்கும் போதிப்பதற்குத் தம் பயிற்சி உடலாகவேண்டுமென்ற நோக்கத்துடனேயே கற்றதால் பயிற்சியின் சிறப்புக் கூறுந் தரமன்று. இளைஞர் சிரோமணி வகுப்பில் இருந்ததால் அவ்வகுப்புக்குப் பல்கலைக்கழகம் வகுத்திருந்த ந்யாயக்ரந்தங்களை மட்டும் கற்கும் வாய்ப்பே கிடைத்தது.

10. ஓய்விலும் சாஸ்த்ராப்யாஸம்

இளைஞருக்குப் பரீக்ஷைக்கு அகப்படாத ந்யாய சாஸ்த்ரத்தின் மேற் பகுதிகளையும் கற்றுத் தீரவேண்டுமென்ற ஆசை எழுந்தது. அதற்கும் வழிவிட்டான் எம்பெருமான். கலாசாலையில் ஆண்டுக்கு இரண்டு மூன்று ஓய்வுக் காலங்கள் உண்டே! அப்பொழுதெல்லாம் தம் ஊருக்கு வந்து உற்சாகத்துடன் விடுமுறையைக் கழிப்பது மாணவர்களின் இயற்கை. இந்த மாணவருக்கோ அந்த விடுமுறைகளில் ந்யாய சாஸ்த்ரத்தின் மேற்பகுதிகளைக் கற்பதற்கு ஆசிரியரை ஆராயும் ஆவல். அருகில் நாவல்பாக்கம் ஸ்ரீ கிராமம். ஊர் பெயரைக் கேட்டவுடன் அந்த ஊருக்குச் சிறப்பைத் தந்துகொண்டு மஹாவித்வானாய் வைராக்ய-அநுஷ்டாந நிதியாய்ப் பரம ஸாலபராய் எழுந்தருளியுள்ள ஸ்ரீ உப. ஐயா தேவநாததாதாசார்ய ஸ்வாமியின் நினைவே வந்து உள்ளத்தில் இனிக்கும். அந்த ஸ்வாமியை அணுகி வழிபட்டுத் தம்

விருப்பத்தை விண்ணப்பம் செய்தார் இளைஞர். ஜ்ஞான ப்ரதானத்தையே தமக்குத் தாரகமாகக்கொண்டு பல சிஷ்யர்களை வித்வான்களாக்கிய பெருமை பெற்ற ஸ்ரீ உப. ஐயா ஸ்வாமி பரம கிருபையோடு இவருடைய விராமங்களில் அளித்த விசேஷ ஞானமும் சேர்ந்து 1938–ஆம் ஆண்டில் பல்கலைக் கழகம் நிகழ்த்திய தேர்வில் முதல்வராகத் தேறச் செய்தது.

11. ஆசார்யாச்ரயணம்-காலக்ஷேபம்

நம் இளைஞர் ந்யாய சாஸ்த்ரத்தில் வியத்தற்கு உரிய முழுத்தேர்ச்சியும் மீமாம்ஸையில் ஸமுசித ஜ்ஞானமும் பெற்றுயிற்று. இனிச் செய்யவேண்டியது என்ன? வேதாந்த வித்யையை க்ரஹித்தல். அதற்குச் சாதனமாகைக்கும் அறிவு மலர்ச்சிக்கும் தாமே மற்ற சாஸ்த்ரங்கள் பயன்படுவன! எம்பெருமானைத் தவிர மற்றவற்றை விளக்கும் சாஸ்த்ரங்களைக் கற்பது தன் திறமையைக் காட்டுவதற்கே யன்றி ஆன்மா கடைத்தேற வழிகாட்டாது என்பது தானே ப்ரமாணங்களின் முடிவு! புதிதாக ஆசார்யனைத் தேடவேண்டுமா? ஸ்ரீமத் அஹோபில மடத்தில் 41-வது திவ்யாஸ்தாநத்தை அலங்கரித்துக்கொண்டு தேஜோராசியாய் ஸௌசீல்யம் ஸௌலப்யம் முதலிய குணங்கள் நிறைந்து விளங்கும் ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவடிகளைச் சரணமடைந்து அந்த அநுக்ரஹத்தால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்-ஸ்ரீகீதாபாஷ்யம்-பகவத்விஷயம் ஆகியவற்றில் பரிபூர்ண ஜ்ஞானத்தைப் பெற்றார் நம் இளைஞர். அந்த ஸ்ரீமத் அழகியசிங்கர் திருக்கையால் அழகியசிங்கன் திருவடி களில் பரந்யாஸம் செய்விக்கப்பெற்று க்ருதக்ருத்யராய் க்ருதார்த்தராளார் நம் வில்லிவலம் ஸ்வாமி. இனி ஸ்வாமி என்று வழங்குவதே நம் ஸ்வரூபத்துக்கு ஏற்கும்.

12. ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம்

வில்லிவலம் ஸ்வாமிக்கு எஞ்சியது ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம். 42-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரையே இந்த ஸ்வாமிக்கு ஸ்ரீபாஷ்ய ஆசார்யனுக்கியது ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸங்கல்பம். சாஸ்த்ர முறையைத் தழுவி வில்லிவலம் ஸ்வாமி குருகுலவாஸம் செய்து ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவாக்கினின்று வழிந்த ஸ்ரீபாஷ்யாம்ருதத்தைப் பருகிப் பருகி உள்ளம் தினைக்கப்பெற்றார். அவசியமான இடங்களிலெல்லாம் விஷயசோதநம் செய்து ஸித்தாந்தார்த்தங்களை நிர்ணயித்துக் கொடுத்த அவ்வாசார்யன் திறத்தில் இந்த ஸ்வாமிக்குப் பக்தி பெருகியது. எம்பெருமானிடத்துப்போலே ஆசார்ய னிடத்தும் பக்தியுடையனுக்கு ஆசார்யன் உபதேசித்த அர்த்தங்களெல்லாம் உள்ளத்துப் பதியுமென்று வெளிப்படையாகவும் எம்பெருமானைக்காட்டிலும் ஆசார்யன்பால் மிக்க பக்திகொண்டவனுக்கு அவன் உபதேசித்ததற்கும் மேலுள்ள விஷயங்களும் உள்ளத்தில் தோற்றுமென்று குறிப்பாலும் உபநிடதம் உணர்த்திய படியே நம் வில்லிவலம் ஸ்வாமிக்கு ஆசார்யன்பால் உள்ள எல்லையற்ற பக்தி

விசேஷம் ஆசார்யன் உபதேசத்தில் அகப்படாத ப்ராமாணிகமான பல அபூர்வ விஷயங்களையும் கண்முன்னே காட்டிச் சிறப்பித்தது. ஸ்ரீமத் அழகியசிங்கரும் இந்தச் சிஷ்யருடைய பக்தி விசேஷத்தையும் ஆஸ்த்தாதிசயத்தையும் மேதாவிலாஸத்தையும் ஆத்மகுண பூர்த்தியையும் கண்டு எல்லையில்லாத உவகைகொண்டு தம் உள்ளத்துக் கிடந்த ஸித்தாந்த ஸாரார்த்தங்களையெல்லாம் வாரி வழங்கிப் பரிபூர்ண அதிகாரியாக்கியருளினர். இங்ஙனம் வில்லிவலம் ஸ்வாமி தோன்றி 23 ஆண்டுகளுக்குள் ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலும் வேதாந்தத்திலும் மிகுத்த தேர்ச்சி பெற்று இளம்பருவம் தொடங்கிக் குலமுறையில் வந்த ஸதாசாரத்திலும் கர்மாநுஷ்டானத்திலும் ஈடுபட்டு ஞானச் சிறப்புடன் விளங்கிக் காண்பவர் மதிப்புக்கொள்ளும் பெருமையுடன் ஸாத்துவிக ப்ரஹ்மசாரியாய்ப் பிரகாசித்தார்.

13. இல்லறம் புகுதல்

இத்தகைய வைதிகரீதியில் உள்ள இந்த வரனைத் தமக்கு மருகராகக் கொள்ளப் பரிசித்தனர் பல நல்லோர்கள். வைதிகத் தன்மைக்கு மதிப்புக் கொடுக்கும் காலம் அது. சடக்கென நிச்சிக்கும் அம்சமன்றே விவாஹம்; விவாஹத்தை நிர்ணயிப்பதில் பல அம்சங்கள் ஆலோசிக்கப்படவேண்டுமல்லவா? லக்ஷ்மீ நரஸிம்ஹன் தன் திருவடிகளைச் சிறு குற்றமுமின்றிப் பரம்பரையாய் ஆராதித்து வந்த ஒரு ஸாத்துவிக மஹானுடைய கன்னியை வில்லிவலம் ஸ்வாமி கைத்தலம் பற்றச் செய்யத் திருவுள்ளம் கொண்டான். அவர்தாம் தையார் வங்கீபுரம் தேவநாதாசார்யஸ்வாமி. அந்த ஸ்வாமி தம் குமாரத்தியான செண்பகவல்லியைக் கொடுத்து ஜாமாதாவாக்கிக்கொள்ள விரும்பினர். இஞ்ஞிமேடு ஸ்ரீமத் அழகிய சிங்கரும் எல்லா அம்சங்களிலும் ஏற்ற ஸம்பந்தம் என்று திருவுள்ளம் மிக உகக்கலாயிற்று. இக்காலத்துப்போல் 'கண்டதும் காதல், பேசியதும் மணம்' என்ற முறையெல்லாம் அக்காலத்தில் காணமுடியாவே! தம் திருத்தகப்பனரும் திருவுள்ளம் உகக்கவே நல்ல நாளில் விவாஹமங்களம் சிறப்புடன் நடந்தேறியது.

14. க்ருஹஸ்த்த தர்ம பரிபாலநம்

சாஸ்த்ரங்கள் இல்லறத்தை மிகச் சிறப்பித்துக் கூறுகின்றன. மற்ற ஆச்ரமங்களைப் படைத்துத் தருவது இல்லறமேயென்றும் விருந்தினராகவே இருக்கச் செய்யும் மற்ற ஆச்ரமங்களைக்காட்டிலும் விருந்தினரை உபசரித்து உண்ட உரிமை பெற்ற இல்லறமே உயர்ந்தது என்றுமெல்லாம் சாஸ்த்ரங்கள் புகழுகின்றன. இவ் வுண்மையை நம் வில்லிவலம் ஸ்வாமி நன்கு உணர்ந்து அதன் பெருமைக்கு ஏற்பச் சாஸ்த்ரமுறை வழுவாது இல்லறம் நடத்தத் தொடங்கினர். கீதையில் கண்ணபிரான் எல்லாப் பொருள்களும் ஸர்வேசுவரனான தனக்குச் சரீரமாய் நிற்பதை விளக்குமிடத்தில் தர்மத்துக்கு முரண்படாத காமமாகவும் தான் இருப்பதாய்க் கூறுகின்றான். இதன் கருத்தை விளக்கத் துறவறத்தில் இருந்த ஸ்ரீ பாஷ்யகாரர் கூசினர்போலும், இல்லறத்தை நடத்திய நம் தேசிகன் தாத்பர்ய சந்திரிகையில்

'தன் மனைவியிடத்துக் கொள்ளும் அன்பு முதலியனவே தர்மத்துக்கு விரோதமில்லாத காமம்' என்று விளக்கியருளினர். இவ்வுண்மைகளையெல்லாம் கருத்தில் கொண்டு வில்லிவலம் ஸ்வாமி தம் தர்மபத்நியை ஸ்ரீ நரஸிம்ஹன் அளித்த வரமாகக்கொண்டு உசித முறையில் மிக்க ப்ரீதியுடன் அவள் தம் கர்மானுஷ்டானம் பகவதாராதனம் முதலிய நித்ய நைமித்திக கர்மங்களில் செய்யும் துணையைப் பெரிதாக மதித்து ஏற்றுத் தம் தேவியோடு ஔபாஸனம்–வைச்வதேவம் முதலிய ஐந்து காலக் கடமைகளில் தவறாது க்ருஹஸ்தாச்ரமத்தைப் பரிபாலித்து வந்ததை நாடு நன்கு அறியும்.

15. ஸந்ததி பெறுதல்

இல்லறத்தை ஏற்பது அதற்கு உரிய தர்மங்களைச் செய்வதற்கும் நன்மக்களைப் பெறுதற்கும் என்ற கொள்கை சாஸ்த்ரத்தைத் தழுவியது. புத்திரன் எனும் சொல் பெற்றோர்களைப் 'புத்' என்னும் நரகத்தில் புகாமல் காப்பவன் என்று பொருள் படுவதால் புத்ரனைப் பெறுவது அவசியமென்ற கொள்கை ஓரளவுக்குச் சாஸ்த்ரத்தைத் தழுவியதேயாயினும் இந்த நிர்ப்பந்தம் ப்ரபந்நரல்லாதவரையே பற்றியதென்றும் ப்ரபந்நர் விஷயத்தில் ஸந்ததியைப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் இல்லையென்றும் ஸகலாசார்யர்களும் ப்ரபத்தி சாஸ்த்ரத்தைக் கொண்டே முடிவுகூறி விட்டனர். அருளிச் செயலோ எம்பெருமான் திருவடிகளைப் பணிந்து வாழும் மக்களைப் பெறுவதைப் பதிகப் பயனாகக் கூறுகின்றது. இந்த ஸ்வாமிக்குப் பெரும் ஸந்ததியை அளித்தால் இவரைக்கொண்டு லோகோபகாரம் செய்ய ஸங்கல்பித்ததற்கு இடையூறு வருமோவென்று சங்கித்து ஸ்ரீ நரஸிம்ஹன் ஓர் உத்தம கந்யையை மட்டும் அருளினன். ஸ்வாமியின் தகுதிக்கு ஏற்றவாறு பரம வைதிக ஸந்ததியைச் சார்ந்த நல்ல ஜ்ஞாதாவான மருகரையும் ஈந்து அவர்களுக்கு நல்ல ஸந்ததிகளை அளித்து இன்புறுகின்றன். இச் செயல் எம்பெருமானது சுயநலக்கருத்தின் விளைவாகவும் இருக்கலாம்.

16. மன்னர்கோவில் வாஸமும் ப்ரவசநமும்

வேண்டுமளவுக்கும் மிகுதியாகச் சாஸ்த்ரங்களிலும், குறிப்பாக வேதாந்தத்திலும் ஜ்ஞாநத்தை ஸம்பாதித்தாயிற்று. இல்லறமும் சாஸ்த்ர முறைப்படி நடந்து வருகின்றது. உலக முறைக்கு ஏற்ப ஒரு ஸந்ததியும் பெற்றாயிற்று. அப்பொழுது பரமபதநாதன் தன் திருவடிக்கு அழைத்துக்கொண்ட திருத்தகப்பனார் கைங்கர்யத்தையும் அவனுக்குச் செய்யும் ஆஜ்ஞாகைங்கர்ய ரூபமாக வில்லிவலம் ஸ்வாமி பக்திசிரத்தைகளுடன் அநுஷ்டித்தாயிற்று. இச்சூழ்நிலையில் மன்னர் கோவிலில் ஆழ்வார்களின் திருவாக்குக்கு அகப்படாமலேயே தன் ஸௌந்தர்யத்தாலும் விபவத்தாலும் வித்வான்கள் பாமரர்கள் உள்பட ஸகல ஜீவராசிகளையும் தன்னிடம் ஈடுபடுத்திப் பல ஆஸ்தாநாதிபதிகளாலும் பல ஆசார்யர்களாலும் யதீச்வரர்களாலும் மற்ற மஹான்களாலும் பரிபூர்ணமாக அநுபவிக்கப் பெற்று விளங்கும் கோபாலனுக்கு ஓர் ஆசை உதித்தது. ஸர்வ ப்ரகாரத்தாலும் பரிபூர்ண அதிகாரியாய் விளங்கும்

வில்லிவலம் ஸ்வாமியைத் தன் அருகே அழைத்துத் தன் அழகு வெள்ளத்தைக் காட்டிக் கொடுத்து இருவரும் பரஸ்பரம் அநுபவிக்கும் வாய்ப்பைப் பெறவேண்டு மென்பதே அந்த ஆசை. அவனும் தன்னை அநுபவிக்கும் சிறந்த அதிகாரிகளைப் பெற ஏங்கி நிற்பவன் தானே! ஒரு யுக்தி செய்தான். தன் ஸந்நிதி வாயிலிலேயே தானே லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவுருக்கொண்டு வாழுமிடமாகிய ஸ்ரீ அஹோபில மடத்தில் வில்லிவலம் ஸ்வாமி கையால் ஆராதிக்கப்படும் வாய்ப்பைப் பெறுவதற் காக ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவுள்ளத்துப் புகுந்தான். உடனே நியமனம் பிறந்தது. உடனே வில்லிவலம் ஸ்வாமி மன்னார்கோவிலில் சேர்ந்து ஸ்ரீ நருஸிம்ஹன் திருவாராதநத்தைத் தொடங்கி, கோபாலனையும் அவ்வப்போது அநுபவித்துக்கொண்டு மன நிறைவோடு வாழ்ந்தார். அங்கும் இவருக்கு ஓய்வு உண்டோ? ஸ்வாமியின் ஞானப் பெருமையையும் நற்குணச் செறிவையும் கண்ட பல வித்யார்த்திகள் ஸ்வாமியை அணுகித் தமக்கு ஜ்ஞாநப்ரதாநம் செய்யுமாறு பிரார்த்தித்தனர். ஸ்வாமியும் மகிழ்ச்சியோடு இசைந்து அவரவர் தகுதிக்கும் விருப்பத்துக்கும் ஏற்பக் காவ்யம்-நாடகம்-அலங்காரம்-சாஸ்த்ரம் இவற்றை ப்ரவசனம் செய்து வந்தார். நாளடைவில் ஸ்வாமியின் புகழ் வளர்தலைக் கண்டு பெரிய பதவியினின்று ஓய்வு பெற்ற வயது முதிர்ந்த பல ஆஸ்திகர்கள் ஞானச் செல்வத்தைக் கொண்டுதான் வயது முதிர்ச்சியைக் கொள்ள வேண்டுமென்ற உறுதியுடையராய்த் தமக்கு மிக இளைஞரான ஸ்வாமியை நாடிப் பிரார்த்தித்துப் பகவத் விஷயம் முதலியவற்றைக் காலக்ஷேபம் செய்து பெரும் பேறு பெற்ற உணர்ச்சியை அடைந்தனர். வில்லிவலம் ஸ்வாமியும் பெற்றது குணமாகக் கிடைத்த பொருளைக் கொண்டு பரிபூர்ண திருப்தியடைந்து குடும்பம் நடத்தி வந்தார். இப்படி ப்ரமாணங்களுக்கு இலக்கான கோபாலனையும் ஸ்ரீ நருஸிம்ஹனையும் அவனைக் காட்டும் ப்ரமாணங்களான ஸ்ரீ ஸூக்திகளையும் பல்வகையிலும் அநுப வித்துக்கொண்டு இரண்டரை ஆண்டுகள் கோபாலன் திருவடி நிழலிலேயே மனவமைதியுடன் வாழ்ந்து வந்தார் நம் வில்லிவலம் ஸ்வாமி.

17. ஸ்ரீ மதுராந்தகத்தில் கலாசாலை ஆசிரியராதல்

இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் விஜய யாத்ரை செய்தருளும் சூழ்நிலையில் கோபாலன் திருவடி வாரத்துக்கும் எழுந்தருள நேரிட்டது. அப்பொழுது வில்லிவலம் ஸ்வாமியின் வாழ்க்கைச் சிறப்பையும் வித்யார்த்திகள் பலருக்கு ஜ்ஞாந தாநம் செய்யும் தோரணியையும் பற்பல ஆஸ்திகர்களின் பெருமதிப்புக்கு இலக்காகி அவர் பிரகாசிப்பதையும் ஸ்ரீமத் அழகியசிங்கர் கண்டருள இடம் ஏற்பட்டது. வில்லிவலம் ஸ்வாமியிடம் கிருபை பெருகியது. தாம் அவதரிப்பித்து முதன் முதலாக ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதியில் நடந்த ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ்ஸிலேயே இந்த ஸ்வாமியின் வாக்யார்த்த சைலியைக் கடாக்ஷித்து விசேஷ அநுக்ரஹம் செய்தருளியதுண்டு. இத்தகைய உயர்ந்த அதிகாரியை இதனினும் மிகச் சிறந்த தொண்டைப் புரிவதற்குப் பாங்கான இடத்தில் அமர்த்தத் திருவுள்ளம் உதித்தது. இந்த நிலையில் ராமபிரானுக்கும் ஓர் அபிலாஷம் ஏற்பட்டது.

கோபாலனது அநுபவத்தில் ஆழ்ந்து கிடக்கும் இந்த ஸ்வாமியைத் தன் அடி வாரத்தில் இருத்தித் தனது அநுபவத்தையும் அளிக்கவேண்டுமென்பதே அது. அப்பொழுது ஸ்ரீமத் அழகியசிங்கர் நியமனம் வருமாறு— ஸ்ரீ மதுராந்தகத்தில் தம்மால் தோற்றுவிக்கப்பட்டுப் பெரும் புகழ் பெற்று விளங்கும் ஸம்ஸ்க்ருத மஹா கலாசாலையில் உபதலைவர் ஸ்தானத்தை ஏற்று விசேஷ ஜ்ஞானத்தையும் ப்ரவசன சாதுர்யத்தையும் பயன்படுத்திப் பல வித்வான்களை உருவாக்கவேண்டுமென்பதே அந்த நியமனம். இரண்டரை ஆண்டுகள் தம் பரிபூர்ண அநுபவத்தைக் கொடுத்துக் களிக்கடலுள் ஆழ்த்திய கோபாலனைத் தொழுது நன்றியறிவித்து நியமனம் பெற்று ஸ்ரீமதுராந்தகம் சேர்ந்தார் நம் வில்லிவலம் ஸ்வாமி. ஸ்வதேசாபிமானத்தால் ஸ்வாமி இதற்கு உடன்பட்டாலும் அதிலும் தவறு இல்லையே! தம்மை அன்புடன் அழைத்த இராமபிரானை க்ருதஜ்ஞதையுடன் மங்களாசாஸனம் செய்து ஸ்ரீமத் அழகியசிங்கர் திவ்யநியமனத்தின்படி ஸம்ஸ்க்ருத கலாசாலையில் உபதலைவர் ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார்.

18. ப்ரவசன சாதுர்யம்

வில்லிவலம் ஸ்வாமி அங்கு வந்து ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டதில் வித்யார்த்திகளின் உத்ஸாஹம் கட்டுக்கு அடங்கவில்லை. வேதாந்த வித்யையைக் கற்க முக்கிய ஸாதனமான தர்க்க சாஸ்த்ர ப்ரவசனம் குதூஹலத்துடன் தொடங்கியது. இப்பொழுது வித்வான்களாய் ஸபைகளில் வாக்யார்த்தம் சொல்லி வெற்றி காணும் இளைஞர்களான பல அதிகாரிகள் வில்லிவலம் ஸ்வாமியிடம் சாஸ்த்ர க்ரஹணம் செய்யும் பேறுபெற்றவர்களென்னுதல் மிகையாகாது. வித்யார்த்திகள் பொருந்தியனவோ பொருந்தாதனவோ எத்தகைய ஸந்தேஹங்களை எழுப்பினலும் பொறுமையுடன் கேட்டு உசித ஸமாதானங்களைச் சொல்லித் தினவு கெட அவர்களின் ஸந்தேஹங்களைத் தீர்க்கும் சிறப்பு பிற இடங்களில் காண அரிது. ஸ்வாமி அந்த ஸ்தானத்தில் அமர்ந்த நீண்ட காலத்தில் எத்தனை வித்வான்களைப் படைத்தாரென்று எண்ணிட்டுக் கூறுதல் கடினம். தாம் விளக்கும் சாஸ்த்ரப் பகுதிகள் வித்யார்த்திகளின் உள்ளத்தில் படிந்தனவா என்பதை ஒவ்வொரு சிஷ்யர் விஷயத்திலும் கண்ட பின்பே மேற்பகுதிகளை ப்ரவசனம் செய்யத் தொடங்குவது ஸ்வாமியின் தனிச் சிறப்பு. ஸ்வாமியிடம் அப்யஸித்த வித்வான்களான பலர் பிறரிடம் காணக்கிடைக்காத ப்ரவசன சாதுர்யத்தையும் அதனால் தாங்கள் பெற்ற ஞானச் செல்வச் சிறப்பையும் இப்பொழுதும் சொல்லிச் சொல்லி மகிழ்வதைக் காண்கின்றோம். இருபத்தைந்து ஆண்டுகள் அக்கலாசாலையிலேயே அமர்ந்து வித்வான்களின் ஸமுதாயத்துக்குச் செய்த மஹோபகாரத்துக்கு வெள்ளி விழா நடத்தும் பெருமை வாய்த்தது இராம பிரான் கடாக்ஷத்தினுடையவும் ஸ்ரீமத் அழகியசிங்கர் திவ்ய அநுக்ரஹத்தினுடையவும் பயனேயாகும்.

19. பின்னும் வேதாந்த க்ரந்தம் செய்ய ஓர் ஆசார்யனைப் பெறுதல்

எந்த அளவுக்குக் கல்வி பயின்றுவிட்டாலும் அறிஞன் திருப்திபெறமாட்டா னென்று பொது நீதி உண்டு. கருதியும் பல ஆசார்யர்களிடத்தும் பல்வகையிலும் கேட்டு அறிவை மேன்மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஓதுகின்றது. தர்க்க சாஸ்த்ரத்திலும் வேதாந்தத்திலும் உறுதியான தேர்ச்சியை விசேஷமாகப் பெற்றுக் கைதேர்ந்த வித்வானெனப் பல வித்வான்கள் ஏற்றுக்கொண்ட பின்பும் அந்தச் சாஸ்த்ரங்களில் பின்னும் உட்புகுந்து அவற்றின் கரையைக் காணவேண்டு மென்ற ஆவல் எழுந்தது வில்லிவலம் ஸ்வாமிக்கு. அதற்கு ஏற்ற மிகச் சிறந்த வாய்ப்பை ஸங்கல்பித்தான் ஸ்ரீ ந்ருஸிம்ஹன். அப்பொழுது தாம் உபாத்யாயராக இருந்த கலாசாலையிலேயே ப்ரதான அத்யாபகராக எழுந்தருளியிருந்த ஒரு மஹா னிடத்து வேதாந்தத்தில் சில கிரந்தங்களை ஸேவிக்க நேர்ந்ததுதான் அந்த வாய்ப்பு. அந்த மஹான் யார்? அந்த ஸ்வாமியின் திருநாமத்தை வெளியே பேசக் கூசி ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயம் முழுதும் ஸ்வாமி அவதரித்த திவ்ய தேசத்தைக்கொண்டே 'திருக்கோட்டியூர் ஸ்வாமி' என வழங்கப்பெற்ற மஹாநு பாவரே அந்த ஸ்வாமி. அந்த ஸ்வாமியின் பெருமையை அடியேன் உணர்த்தப் புகுவது கதிரவனைக் கைவிளக்கைக் கொண்டு காட்ட முயல்வதுபோலாகும். ஆயினும் அந்த மஹானின் சதாப்த பூர்த்தி மஹோத்ஸவ மலரில் பல வித்வான் களின் உயரிய வியாசங்களின் நடுவே சிற்றறிவினனான அடியேனும் ஸ்வாமியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதிப் புனிதத் தொண்டைச் சிறிதே ஆற்றிய திருப்தி பெற்றுள் ளேன். ஜ்ஞானமும் அநுஷ்டானமும் வைராக்யமும் ஆத்ம குணங்களும் தமக்கு உரிய இடம் தேடித் திருக்கோட்டியூர் ஸ்வாமியையே தாம் உறைவதற்கு ஏற்ற இடமாகக் கொண்டனவென்பர் பெரியோர். மற்ற பெருமைகளெல்லாம் நிற்க, குறிப்பிட்டு ஆத்ம குணங்களைப் பற்றிப் பேசும்போது திருக்கோட்டியூர் ஸ்வாமியை யும் அடியேனுக்கு ஆசார்யனும் திருத்தகப்பனுமாகிய நவநீதம் ஸ்வாமிகளையும் ஒன்று சேர்த்து வைதிக கோஷ்டியில் வழங்குவதுண்டு.

20. ஸ்ரீ தத்த்வ முக்தாகலாபச் சிறப்பு

எந்தக் கிரந்தத்தைத் திருக்கோட்டியூர் ஸ்வாமியிடம் ஸேவிக்கலாமென்ற சிந்தை வில்லிவலம் ஸ்வாமிக்கு. ஸ்ரீதேசிகன் தாமே இட்ட கட்டளை நினைவுக்கு வருகின்றது. அத்யாத்ம விஷயத்தில் ஆசார்ய ஸம்பந்தம் பெற்றுத் தேர்ந்த ஞானிகள் கூட ஸித்தாந்தத்தில் கலக்கமுடியாத தெளிவு பெறுவதற்குப் பாங்காக ஸ்ரீ தேசிகன் தத்த்வ முக்தாகலாபமென்ற ஓர் அத்புத ஸ்ரீஸூக்தியைத் தோற்று வித்தார். அந்தக் கிரந்தத்தைப் பற்றிச் சில அம்சங்கள் கூறியேயாகவேண்டும். ஸ்ரக்தராவ்ருத்தத்தில் தமக்கே உரிய கவித்திறனை ஊட்டி அருளிய ஐந்நூறு ஸுலோகங்கள் கொண்டது இந்த ஸ்ரீஸூக்தி. தொடங்கும்போது எம்பெருமானது திருமேனியின் கருநிறத்தை வேண்டுவதையே மங்கள ஸுலோகமாக்கிக் கடைசிப்

பாதத்தில் வடமொழியிலும் அழகிய முற்றுமோகனை அமைத்துப் பாடியுள்ளார். இந்தக் கிரந்தத்தின் பெருமைகளைத் தாமே விளக்கி இதனை அவசியம் கற்று உள்ளத்துள் பொருத்திக்கொள்ளவேண்டுமென்று ஸ்ரீ தேசிகன் தாமே கட்டளை யிட்டுள்ளார். மேலும் ஸர்வ சாஸ்த்ரார்த்த ஸாரமாய்த் தோன்றிய இந்தக் கிரந்தத்தில் காணும் பல அபூர்வ விஷயங்களை மற்ற நூல்களில் காணமுடியா தென்றும் இதில் காணுததை வேறு எந்த நூலிலும் காணமுடியாதென்றும் உறுதி கூறிப் பெருமிடுக்குடன் பெருமிதத்துடன் அப்புள்ளார் திருவடியைப் பணிந்து பெற்ற பயிற்சியால் நூறு மடங்கு அறிவு வளர்ச்சி பெற்ற தம்மைத் தவிர வேறு யாராலும் பகவத்ராமாநுஜாசார்யர் போட்டுவைத்த முடிச்சை நிர்ணயிக்கமுடியா தென்றும் ஆதலின் தாம் நிச்சித்து வெளியிட்ட முறையிலேயே எஞ்சிய அம்சங்களை யும் சிஷ்யர்கள் முடிவு செய்துகொள்ளவேண்டுமென்றும் அதற்கு மாறுபட்ட எந்தக் கொள்கையையும் கொள்ளக் கூடாதென்றும் ஸ்ரீ தேசிகன் தாமே முடிவு கட்டிப் பேசியருளியுள்ளார். இந்த ஸாத்துவிகச் செருக்குடன் வேறு எந்தக் கிரந்தத்திலாவது இவ்வாறு அருளிச்செய்ததுண்டா என்பதைச் சிந்தியுங்கள்.

21. ஸர்வார்த்த ஸித்தியுடன் காலக்ஷேபம்

தத்துவமுக்தாகலாபம் அருளிச்செய்து பூர்த்தியடைந்துவிட்டது. பின்பு ஸ்ரீ தேசிகனுக்கு ஒரு சிந்தை எழுந்தது. கடினமாய் அமைந்துவிட்ட இந்தக் கிரந்தத்தின் உட்கருத்தை உள்ளவாறு உணர்வதற்குத் தாமே ஒரு வியாக்கியானமும் இயற்றினால்தான் ஸேவிப்பவர்கள் நேரிய பயனைப் பெற முடியுமென்று திரு வுள்ளத்துத் தோன்றியது. எல்லா அர்த்தங்களையும் எளிதில் விளக்கவல்ல 'ஸர்வார்த்த ஸித்தி' என்ற வியாக்கியான க்ரந்தத்தையும் தாமே அருளினர். பூர்ண ஜ்ஞானம் பெற்று விளங்கிய வில்லிவலம் ஸ்வாமி மிக்க சிரத்தையுடன் திருக்கோட்டி யூர் ஸ்ரீ ஸ்வாமியிடம் ஸர்வார்த்த ஸித்தியுடன் தத்த்வமுக்தாகலாபத்தை க்ரஹித்தது முன்பு உள்ள ஞானத்துக்கு மெருகூட்டியது. சிறந்த வித்வான்களுக்குக் கூடப் பலருக்கு இந்த இரண்டு க்ரந்தங்களையும் ஸேவிக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. வில்லிவலம் ஸ்வாமி இந்த இரண்டு ஸௌக்திகளையும் கசடறக் கற்றதால் பின்பு ப்ரவசநத்தில் எத்தகைய வெற்றிகண்டாரென்பதை ஸ்வாமியின் ப்ரவசநத்தில் அடங்கிய அதிகாரிகள் நன்கு உணர்ந்து மனம் பூரிப்பர். பல்லாண்டுகள் அந்தக் கலாசாலையில் தலைமை ஸ்தாநத்தில் அமர்ந்து ஜ்ஞாநப்ரதாநம் செய்தருளிய திருக் கோட்டியூர் ஸ்வாமி ஓய்வுபெறவேண்டிய அவசியம் வந்தது. ஒருவருக்கொருவர் மிக்க வேற்றுமை காணமுடியாத மஹான்களைத் தான் அக்கலாசாலையின் தலைமை ஸ்தாநத்தில் அமர்த்துகின்றன ஸ்ரீ நரஸிம்ஹன்.

22. ப்ராமாண்யவாதம் பயிலல்

வில்லிவலம் ஸ்வாமி நியாய சாஸ்த்ரத்தை நன்கு பயின்று அதன் உதவியால் அத்யாத்ம சாஸ்த்ரத்திலும் இனி க்ரஹிக்கவேண்டிய ஸௌக்திகள் இல்லையென்னலாம் படி தகுதியை ஸம்பாதித்த பின்பும் நியாய சாஸ்த்ரத்தில் இறுதிப் பகுதியாய் எஞ்சி

புள்ள ப்ராமாண்ய வாதத்தையும் கற்றுவிடவேண்டுமென்ற ஆர்வம் வளர்ந்தது. திருக்கோட்டியூர் ஸ்ரீ ஸ்வாமி ஓய்வை ஸ்வீகரித்த பின் அந்தத் தலைமை ஸ்தானத்துக்கு ஸ்ரீமத் அழகியசிங்கரால் நியமிக்கப்பெற்றவர் யார் தெரியுமா? அந்த ஸ்வாமியே மாற்றுருக்கொண்டாரென்னும்படி பெருமை பெற்று விளங்கிய தேவனார் விளாகம் ஸ்ரீ-உப-லக்ஷ்மி நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியே. பகவதாராதனத்துக்கும் அதிதிஸத்காரத்துக்கும் பாகவத கைங்கர்யத்துக்கும் பல திவ்ய தேசங்களில் உள்ள அர்ச்சைத் திருமேனிகளின் உத்ஸவாதிகளுக்கும் பயன்பட்ட பின்பும் மிகுதியாகத் தேங்கிய இம்மைச் செல்வமுடையராய் ஜ்ஞான வைராக்ய அநுஷ்டானங்களில் சிறு குறையுமின்றி இல்லறம் நடத்திக்கொண்டு விளங்கியவர் இம் மஹான். பதினாறு மாற்றுப்பொன் திருமேனியுடன் பிரகாசிக்கும் கண்ணனைப் பரம்பரையாய் ஆராதித்துவரும் மஹத் ஸந்ததியில் தோன்றித் தாமும் அக் கண்ணனை நிரந்தரமாக அநுபவித்து ஆராதித்து வந்தவர் இந்தப் புண்ய புருஷர். இவர் அடியேனுடைய திருத்தகப்பனார் நவநீதம் ஸ்ரீ ஸ்வாமியிடம் ந்யாய சாஸ்த்ரத்தை அப்யஸிக்கத் தொடங்கிப் பின் சதுஃசாஸ்த்ரகல்பதரு அம்மாஸத்ரம் ஸ்ரீஸ்வாமியிடம் பயின்று பின் திருவையாற்றுக் கலாசாலையில் சேர்ந்து நான்கு ஆண்டுகளில் ந்யாய சிரோமணியில் உயர் வெற்றி பெற்று விளங்கியவர். ந்யாய சாஸ்த்ர அப்யாஸத்தில் இம் மஹானுக்கு அடியேன் ஸதீர்த்யன் என்று சொல்லிக்கொள்ளும் பாக்யம் பெற்றேன். ஸ்வாமியின் செல்வ நிலையும் விசாலமான மனப்பாங்கும் அநந்ய ப்ரயோஜநராகவே ஸ்ரீமதுராந்தகம் கலாசாலைத் தலைமையை ஏற்கச்செய்து நடத்தச் செய்தன. பின்பு இந்த மஹானே 45-வது ஸ்ரீ அஹோபில ஆஸ்தானத்தை அலங்கரித்தருளினரென்பதை அடியேன் இங்கு விளக்கவேண்டிய அவசியமில்லை. சாதுர்யத்தின் எல்லைகண்ட நம் வில்லிவலம் ஸ்வாமி புதிய ப்ரதாநாத்யக்ஷரான ஸ்வாமியிடம் ப்ராமாண்யவாதத்தைத் தொடங்கி மற்றுமுள்ள க்ரந்தங்களையும் குருமுகமாகவே தன்கு பயின்றார். ப்ரவசநத்திலே ருசி கண்ட தலைவர் ஸ்வாமிக்கு இத்தகைய அதிகாரி கிடைத்ததில் உத்ஸாஹம் பொங்குகின்றது. உத்க்ரந்தங்களெல்லாம் அருளி ந்யாய சாஸ்த்ரத்தில் இனிக் கற்கவேண்டிய நூல் இல்லையென்னலாம்படி செய்துவைத்தருளினர். தாம் கற்பிக்காத பல விஷயங்களையும் வில்லிவலம் ஸ்வாமி தம் மேதாவிலாஸத்தால் காணுமாறு அநுக்ரஹித்த சிறப்பு இவரைச் சிறந்த நையாயிகராக்கியது. இவரும் க்ருதார்த்தராய் மகிழ்ந்தார். தர்க்க வேதாந்தங்களில் வில்லிவலம் ஸ்வாமி சிறந்த நிர்வாஹ சக்தியைப் பெற்று வித்வத் கோஷ்டியின் பெருமதிப்புக்கு உரியராய்ப் பிரகாசித்தார்.

23. விருதுகள் பெறுதல்

வில்லிவலம் ஸ்வாமியின் ஜ்ஞான பரிபாகத்தையும் விஷய சோதந சக்தியையும் வாக்வ்யாபாரம் நடத்தும் சாதுர்யத்தையும் கண்டு பல ஸதஸ்ஸுக்களும் இந்த ஸ்வாமியை விரும்பி அழைத்துப் பங்குகொள்ளச் செய்தன. ஸ்ரீமாலோலன் திருவடி நிழலில் ஆண்டுதோறும் நடைபெறும் ஸதஸ்ஸிலும் ஸ்வாமியின் தொடர்ச்சியால் நடந்த சில விசேஷ நிகழ்ச்சிகளைக் கண்டு ஸ்ரீமத் அழகியசிங்கரும் பண்டித

கோஷ்டியும் திருவுள்ளம் மிக உகக்கச் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டது. பல்லாண்டு கட்கு முன் இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் ஹைதராபாத்தில் நடத்தியருளிய ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ்ஸில் இந்த ஸ்வாமி நிகழ்த்திய வாதத்திறனைக் கடாக்ஷித்துத் திருவுள்ளம் மிக உகந்து அந்தச் சபை நடுவே வித்வான்கள் முடி துலுக்கும்படி 'வேதாந்த வாவதூகர்' என்னும் விருதை அருளிப் பரிபூர்ண அநுக்ரஹம் செய்தருளியாயிற்று. ஈரசு படாதபடி ஸ்ரீமத் அழகியசிங்கர் இட் டருளிய விருது ஸ்வாமியின் திருநாமத்தை மறக்கச்செய்து தானே பெயராக வழங்கலாயிற்று. மைசூர் ஸ்ரீ பரகால மடத்தில் ஆஸ்தானாதிபதியாய் எழுந்தருளி யிருந்து பஹு க்ரந்த நிர்மாணம் செய்து பெரும்புகழ் பெற்று ஞானியாய் விளங்கிய ஸ்ரீமத் அபிநவ ரங்கநாத ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமியின் எண்பதாவது திரு நக்ஷத்ர மூர்த்தி மஹோத்ஸவம் மஹாவிபவத்துடன் நடந்தபோது பரம கிருபை யுடன் நம் வில்லிவலம் ஸ்வாமியை அழைத்து இவர் ஞான விசேஷத்தையும் வாத சாதுரியையும் கண்டு மிக்க களிப்புப் பெற்று 'வித்வந்மணி' என்ற விருதை அநுக்ரஹித்து அந்த ஆசார்ய சிரேஷ்டர் மிகப் பாராட்டியதும் மகிழ்ச்சிக்கு உரித்தாகும்.

24. ஆத்மகுண பூர்த்தி

நல்ல ஜ்ஞாநத்தைப் பெற்றதன் பலன் நற்குணங்களும் நல்லொழுக்கமும் நிரம்பப் பெறுவதே என்று பாரதம் கூறும். ஸகல சாஸ்த்ரங்களும் அடக்கம் பெறுவதையே பலனாக விதிக்கின்றனவென்றும் மனத்தை அடக்கியவன் எல்லா சாஸ்த்ரங்களையும் அறிந்தவனாகக் கருதப்படுவானென்றும் ப்ரமாணங்கள் கூறு கின்றன. வில்லிவலம் ஸ்வாமியிடம் பல நற்குணங்கள் ஒளிவிட்டு நிற்பதுபோல் உள்ளத்தில் அடக்கமும் இயற்கையாகவே அமைந்துவிட்டது சரண்யன் ப்ரஸாத மாகும். ஔபாஸநம் வரை உள்ள நித்யகர்மங்களையும் பகவதாராதநம் வைச்வ தேவம் முதலிய ஆஜ்ஞாகைங்கர்யங்களையும் சக்திக்கு ஏற்றவாறு அநுஜ்ஞாகைங்கர் யங்களையும் எல்லையற்ற சிரத்தையுடன் சாஸ்த்ர முறை வழுவாது அநுஷ்டித்துக் கொண்டு பஞ்சகால பராயணராய்ச் சாஸ்த்ரீய வாழ்க்கையை நடத்திவந்த இந்த ஸ்வாமிக்குச் சரண்ய கடாக்ஷத்தால் ஆத்ம குணங்கள் தாமாகவே வந்து புகுந்து உறைந்தனவென்னுதல் மிகப் பொருந்தும். உலகில் நல்ல அறிஞர்களுக்குக் கூட ஸம்ப்ரதாய விஷயத்தில் சிற்சில ஸங்கேதங்களால் உள்ளத்தில் எழும் சிறு களாங்கங்கள் கூட வில்லிவலம் ஸ்வாமியை அணுகாததால் வேற்றுமையுணர்ச்சிக்குச் சிறிதும் இடமின்றி நம் ராமாநுஜ-தேசிக-தர்சநஸ்தர்கள் என்ற உணர்ச்சியையே கொண்டு ஸர்வபூத ஸுஹ்ருத்தாய் விளங்கிய பெருமை ஸ்வாமிக்குத் தனிச்சிறப்பு. தானாக முயன்று உணவு தேடமுடியாத மலைப்பாம்பு தானாக அணுகிய உணவைக் கைவிடாதது போல் ப்ரபந்நனானவனுக்குஹஸ்த்தனும் தன் முயற்சியின்றித் தற்செயலாக வந்த போகங்களை மறுக்காது ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சாஸ்த்ரம் கூறும். இந்த ஸ்வாமியின் நீதியோ விலக்ஷணமானது. சாஸ்த்ரம் அநுமதித்த—தாமாக வந்த—போகங்களைப் பெறுவதற்குக் கூட ஸ்வாமியின் பற்றற்ற தன்மை இடமளிப்ப

தில்லை. தாம் பெற்ற அனுபவையே மேருவாய்க்கொண்டு பரம திருப்தியடையும் மனப்போக்கு பிறரிடம் காண்பது அரிது. இந்த ஸ்வாமியைப் பரீக்ஷிக்கும் எண்ணத்தாலோ வேறு ஒருவரிடம் தமக்குள்ள விரோதத்தாலோ அவர் ஸ்வாமியைப் பழிப்பதாக வந்து கோள் சொன்னால் ஸ்வாமியின் விடை—'காரணமின்றிப் பழிக்கமாட்டார். பழித்தால் நம் குற்றத்தை நினைவூட்டியதற்கு அவருக்கு எமது நன்றி.' என்றே வரும். எம்பெருமானுக்கு அடியார்களிடம் உள்ள அன்பைச் சோதிப்பதற்காகப் பிராட்டி அவர்களிடம் உள்ளதாய் ஒரு தவற்றைத் தன் நாயகனிடம் கூறினால் 'என் அடியார் அது செய்யார். செய்தாரேல் நன்று செய்தார்' என்று எம்பெருமான் அருளிச் செய்யும் முறையையே பின்பற்றியது இந்த ஸ்வாமியின் மனப்போக்கு என்னலாம்.

25. பணிவுச் செல்வம் நிறைதல்

ஸ்ரீ வைஷ்ணவர்கள் இருவர் ஸந்திக்கும்போது ஒருவருக்கொருவர் கீழே விழுந்து வணங்கவேண்டுமென்று பொது விதி உண்டு. வில்லிவலம் ஸ்வாமி அதனைத் தமக்கு மட்டும் இட்ட கட்டளையாகக் கொண்டு பாகவதர்களைக் காண்கையில் தாமே முதலில் விரைவில் ப்ரணமம் செய்துவிடுவது ஒரு விசேஷாம்சம். ஸ்வாமி சிலருக்குக் கடிதங்கள் விடுக்க வேண்டிய சூழ்நிலையில் முதலில் மர்யாதையைக் காட்டும் ஸம்ப்ரதாயச் சொற்கள் கொண்ட வாக்யங்களை ப்ரயோகிக்கும் போது தம் பெருமையை மறந்து தம் ஸ்வரூபத்துக்கு ஏலாத முறையில் கூட எல்லையற்ற விநயத்தைப் பொதிந்து எழுதும் ஸ்ரீமுகங்கள் காண்பவர்க்கு வியப்பையும் திகைப்பையும் விளைவிப்பன. அடியேனுக்குப் பரம க்ருபையுடன் அருளிய ஸ்ரீமுகங்களில் பொருளல்லாத அடியேனைப் பொருளாக்கி முதலில் பத்ய ரூபமாக விடுத்த ஸ்ரீமுகங்கள் பல அடியேனைக் கூசவைத்தன. அடியேன் வாயிலாக வெளிவந்த கிரந்தங்களைக் கடாக்ஷித்துப் பெற்ற ஆநந்தாதிசயத்தின் விளைவாக ஸ்வாமி நேரில் அருளிய வார்த்தைகளும் அருளிய ஸ்ரீமுகங்களும் இனி வரப்போகும் தகுதிக்கு ஒரு மங்களாசாஸந ரூபமாகவே கொள்ளுதற்கு உரியன. ஸ்ரீதேசிகன் ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரத்தில் காட்டிய நிஷ்டைகளுக்கு எடுத்துக்காட்டாக ஸ்வாமியின் மனப்போக்கைக் கொள்வது மிகப் பொருந்தும். இத்தகைய மஹானிடம் ஆத்ம குணங்கள் உள்ளடங்காமல் வெளியிலும் நிரம்பி வழிவதைக் காணலாம். எம்பெருமானுக்குப் பிறகு அவர் சிஷ்யர்கள் வாயிலாக ஸம்ப்ரதாயம் பல கிளைகளாகப் பிரிந்தபோதிலும் தலைமையான விஷயங்களில் வேறுபாடு இல்லையென்றும் பதங்களுக்குப் பொருள்கோள் கூறுவதிலும் வாக்யங்களின் அமைப்பிலும் உள்ள சில வேற்றுமைகள் முக்கிய விஷயங்களில் வேறுபாட்டை விளைவிக்கமாட்டா என்பதையும் ஸ்ரீ தேசிகன் முதன் முதலாகத் திருக்கைவைத்த ஸம்ப்ரதாய பரிசுத்தியென்னும் ரஹஸ்யத்தில் முடிவு கட்டியதில் மிகவும் உள்ளம் ஊன்றி ரஸித்தவர் இந்த ஸ்வாமி. கேவல ஸங்கேதத்தைப் பொருட்படுத்தாது எந்தச் சர்ச்சையிலும் ஈடுபடாது ஸ்வஸித்தாந்த ரக்ஷணத்திலேயே முக்கிய நோக்குடன் அஜாத சத்ருவாய்ப் பிரகாசித்தவர் நம் வில்லிவலம் ஸ்வாமி.

26. இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரின் கடாக்ஷம்

அப்பொழுது வில்லிவலம் ஸ்வாமிக்கு 35 வயது. இந்த வாலிபப் பருவத்திலேயே இந்த ஸ்வாமிக்கு ஜ்ஞாநாநுஷ்டாநாதிகள் பரிபூர்ணமாய்ப் பொருந்தியிருப்பதைக் கடாக்ஷித்த இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவுள்ளத்தில் ஓர் எண்ணம் உதித்தது. தமக்குப் பின் ஆஸ்தாநத்தை அலங்கரிப்பதற்கு ஏற்ற அதிகாரிகளைத் திருவுள்ளத்துக்கொண்டு லௌகிக சாஸநம் ஒன்று எழுதியருளும் போது வில்லிவலம் ஸ்வாமியையும் அவர்களுடன் சேர்த்துக் குறிப்பிட்டிருப்பது இந்த ஸ்வாமியிடம் உள்ள நம்பிக்கை, கடாக்ஷம் இவற்றின் விளைவேயாகும். திருநின்றவூரில் முன்பு நடந்த ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ்ஸில் தம் திருவடிகளைச் சார்ந்த பலர் முன்னிலையில் இந்த அம்சத்தை இந்த ஸ்வாமியிடம் வெளிப்படையாகவே அருளிச்செய்யும்படியிருந்தது.

27. வாராணஸீவாஸம்

வில்லிவலம் ஸ்வாமியின் ஜ்ஞாந விசேஷத்தையும் ப்ரவசந சக்தியையும் பல்வகையிலும் கேட்டுணர்ந்த காசிமா நகரப் பல்கலைக் கழகம் ஸ்வாமியின் உபகாரத்தைத் தான் பெறுதற்கு ஆசையுடனும், அன்புடனும் அழைத்தது. அவ்வளவு தூரதேசத்துக்குச் சென்று வஸிப்பதில் ஸ்வாமிக்கு ஆசார அநுஷ்டாநக் குறைவு வருமோ என்று ஓர் அச்சம் எழுந்தது. பின் அத்தகைய குறைவு யாதும் இன்றி வாழ்க்கை நடத்தலாமென்று ஆப்தர்கள் உறுதி கூறவே ஸ்வாமிக்குச் சற்றே சாபலம் உண்டாயிற்று. சதுமுகன் கையினின்று சதுப்புயன் தாளில் சேர்ந்து அந்தப் பரமபாவனத் தன்மையை உணர்ந்த சங்கரன் சடையினில் இறங்கி அவனைத் தூயனுக்கிய கங்கைநதிக்கரையில் தொடங்கிய ஸ்வாமியின் வாராணஸீ வாஸம் பத்து ஆண்டுகள் அதை விட்டு அகலாமல் செய்துவிட்டது. கங்காதீர்த்தத்துக்கு மட்டும் முதல் நாள் எடுத்த தீர்த்தத்தை மறுநாளும் பயன்படுத்திக் கொள்ளலாமென்று நம் தேசிகன் கண்டு வெளியிட்ட பெருமையுடைய கங்கா தீர்த்தத்தையே ஸ்நானம் முதல் பகவதாராதநம் வரை பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டதில் ஸ்வாமிக்குப் பெருமகிழ்ச்சி.

28. ஸ்வாமியிடம் வடநாட்டினருக்கு மதிப்பு

பல்கலைக் கழகத்தில் அத்புதமான ரீதியில் ஸ்வாமியின் சாஸ்த்ர ப்ரவசனம் தொடங்கியது. தென்னாட்டில் உள்ள ஞானச் சிறப்பை நன்கு உணர்ந்த வடநாட்டு வித்வான்களுக்கு வில்லிவலம் ஸ்வாமியின் சாஸ்த்ர ப்ரவசந சைலியும் வ்யவஹார சக்தியும் பெரு வியப்பை விளைவித்து அவர்களை ஸ்வாமியிடம் ஈடுபடச் செய்தன. தேச பேதத்தைக்கொண்டு இந்நாட்டினரிடம் அவர்களுக்கு இயற்கையில் எழும் வேற்றுமையுணர்ச்சி கூட ஸ்வாமி விஷயத்தில் ஏற்படாது ஸ்வாமியிடம் அவர்கள் பெருமதிப்புக்கொண்டு ஒருநீராய்ப் பழகியது ஓர் அபூர்வ வாய்ப்பே.

இந்நாட்டிலின்று அங்கு யாத்ரையாகர் சென்ற பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்வாமிக்கு அங்கு நடக்கும் மர்யாதைகளைக் கண்டு வியந்து ஸ்வாமியால் நன்கு ஆதித்யமும் செய்யப்பெற்று வந்து அந்த வைபவங்களை விளக்கியதுண்டு. சிறிதும் சோம்பாது ஒய்வின்றி வித்வாப்ரவசநம் செய்யும் உத்ஸாஹத்தில் தம் உடல் நலத்தைக் கூடப் பொருட்படுத்தாது புனிதத் தொண்டிலேயே ஈடுபட்டு வில்லிவலம் ஸ்வாமி தம் திருமேனிக்கு நோவையும் வருவித்துக்கொண்டதுண்டு.

29. அர்ச்சையில் முன்னோர்களின் ஈடுபாடு

ஆழ்வார் ஆசார்யர்களுக்கு அர்ச்சைத் திருமேனியில் உள்ள அநுபவத்தைச் சிந்தித்தும் இயற்கையாகவும் வில்லிவலம் ஸ்வாமிக்கு அர்ச்சைத் திருமேனிகளில் உள்ள ஈடுபாடு கூறுந்தரமன்று. நம்மாழ்வார் தம் மனம் வாக்கு உடல் ஆகிய மூக்கருவிகளும் அர்ச்சைத் திருமேனியின் கைங்கர்யத்துக்குப் பயன்பட்டால் இந்த லீலாவிபூதியிலேயே மகிழ்வுடன் திரிந்து கொண்டிருப்பதாய்ப் பேசுகின்றார். பின்னும் ஒரு படி முன்னே சென்று அவனை இங்கேயே அநுபவித்துக்கொண்டு அவன் குணங்களில் உள்ளம் ஒன்றியிருக்கும் இன்பநிலையினும் அவன் பெரிதாய்க் கொடுக்கும் வைகுண்டம் போக்யமாகுமா என்று அவனையே வினவுகின்றார். கலியன் அர்ச்சைத் திருமேனியில் கொண்ட ஈடுபாட்டின் மிகுதி அவரை நித்ய விபூதியையே இல்லையாக்கி நாஸ்திகவாதம் செய்யும் அளவுக்குக் கூடக் கொண்டுவிட்டது. திருப்பாணாழ்வாரின் நிலையே வேறு., அவர் எல்லா அர்ச்சைத் திருமேனிகளையும் திருவரங்கன் திருமேனியிலேயே கண்டு பரம்-வியூஹம்-விபவம் முதலிய திருமேனிகளைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தினாலும் அரங்கனைக் கண்ட தம் கண்கள் காணமாட்டா என்று உறுதிகொண்டு பேசியதை நம் தேசிகனும் விளக்கியருளியதுடன் அழகிய ஓர் உவமானம் ஆழ்வார் கருத்தில் இருந்ததாகவும் வெளியிட்டருளினார். அதாவது - இந்நாள் போல் செயற்கையுணவின்றித் தாய்ப்பாலையே தாரகமாகக் கொண்டு வளரும் குழந்தைக்கு மற்ற உணவு ருசியாதாற்போல் திருப்பாணாழ்வாரின் நிலையைப் பேசுகின்றார். தொண்டரடிப் பொடிகளோ திருவரங்கன் திருமேனியநுபவம் தவிர இந்திரப் பதவியை அள்ளிக் கொடுத்தாலும் விரும்பாமையைக் கூறுகின்றார். ஸ்ரீ தேசிகனும் பேரருளாளன் திருமேனியநுபவத்தை நிரந்தரமாகப் பெற்றால் ஸ்ரீ வைகுண்டவாஸத்தை விரும்பவேயில்லையென்று ஆணையிட்டும் அருளிச்செய்கின்றார்.

30. அர்ச்சையிடம் வில்லிவலம் ஸ்வாமியின் ஈடுபாடு

இத்தகைய ஈடுபாடுகளும் தமது இயற்கையான அநுபவமும் சேர்ந்து வில்லிவலம் ஸ்வாமிக்கு அர்ச்சைத் திருமேனிகளில் பெருங்காதலை விளைவித்துவிட்டன. திருப்பதி கலாசாலையில் மாணவராய் விளங்கும் நிலையிலேயே அர்ச்சையில் ஊற்றம் இவரது உள்ளத்துப் புகுந்துவிட்டது. கலாசாலையில் ஒய்வுக் காலம் தொடங்கியதும் நேராகத் திருவெவ்வுளுக்கு வந்து எவ்வுள் கிடந்தானது அநுபவத்தில் மூழ்கி

நிற்பது வழக்கமாகிவிட்டது அங்கு அவனுடைய திருவவயவங்களை ஒவ்வொன்றாய் ஸேவித்துத் திருமேனியின் முழுமையான ஸௌந்தர்யத்தில் உள்ளத்தைப் பறி கொடுத்துத் தம்மையே மறந்து நிற்பர் வில்லிவலம் ஸ்வாமி. அர்ச்சைத் திரு மேனியை ஆழ்ந்து அநுபவிப்பது ஒரு கலையென்றே சொல்லலாம். இந்தக் கலையில் தேர்ச்சி சில பாக்யவான்களுக்கே கிட்டும். இந்த ஸ்வாமிக்கு அர்ச்சாநு பவத்தில் ஆழ்ந்து கிடக்கும் நிலை எம்பெருமான் அளித்த ஒரு வரப்ரஸாதம். பல ஸம்யங்களில் பேரருளாளன் இந்த ஸ்வாமியின் உள்ளத்துப் புகுந்து தன் அநுபவத்தை நேராக அளிக்க அழைத்துவிடுவான். உடனே ஸ்வாமியின் மனத் தினும் விரைவுகொண்டு சரீரம் பெருமாள்கோயில் போய்ச் சேர்ந்துவிடும். பின் பேரருளாளனை அநுபவிக்கும் கோலாஹலம் தான். அநுபவத்தில் ஆழ்ந்து விடுவார். அசுவமேதயாகத்தில் பிரமன் பக்தியோடு ஸமர்ப்பித்த வபையின் மணம் வீசும் திருவதரத் தளிர்களின் திவ்யஸௌந்தர்யத்தில் மயங்கி நிற்பர். தம்மை நோக்கிச் சில குளிர்ந்த அருளுரைகள் அந்தத் திருப்பவழவாயினின்று பிறப்பதான ஒரு தோற்றம் ஸ்வாமிக்கு உள்ளத்தில் உதிக்கும். வேறு எந்த அர்ச்சைத் திரு மேனியிலும் காணமுடியாத காம்பீர்யத்தைக் கண்முன்னே காட்டும் அவன் திருமார்பு ஸ்வாமியைத் தன் வசமாக்கிக் கொள்ளும். வில்லிவலம் ஸ்வாமிக்கு இருமறைகளிலும் சமமான ஈடுபாடு உண்டு. முன்னல் அருளிச் செயல் கோஷ்டி செல்ல, பின்னல் அதனை நாடித் தொடரும் பேரருளாளனுடன் அந்த ஸூக்தியின் அநுஸந்தா நத்தைக் கேட்டு ஆழ்வார் கொள்ளும் பகவத் குணநுபவத்தில் தாமும் பங்கு கொள்வார். பின் பேரருளாளனைத் தேடிச்செல்லும் வடமறை கோஷ்டியில் அதி யத்புதமான வேதபாராயணத்தைக் கேட்டு அம்மறை கூறும் அவன் பெருமை களிலும் மண்டிப் பெருமகிழ்வெய்துவர். பல திவ்ய தேசங்களுக்கும் சென்று அர்ச்சைத் திருமேனிகளை ஸேவித்து அநுபவிக்க ஆசை பொங்கியது ஸ்வாமிக்கு. திவ்ய தேசயாத்ரை தொடங்குகின்றது. ஸ்வாமியின் வாலிபப் பருவத்திலேயே திருவல்லிக்கேணி - திருக்குடந்தை - திருவிண்ணகர் - ராஜ மன்னர் ஸந்நிதி முதலிய பல ஸ்தலங்களுக்கும் சென்று அந்தந்தத் தலத்து எம்பெருமான்களைப் பரிபூர்ணமாய் அநுபவித்துத் திருவரங்கத்துப் பெரிய பெருமாளையும் விசேஷித்து அநுபவித்து ஆநந்த ஸாகரத்தில் மூழ்கினர் வில்லிவலம் ஸ்வாமி. ஆனால் தீராத அளவிலாக் காதல் பேரருளாளனிடமே.

31. ஸ்ரீ அஹோபில மடம்-ஆசார்ய பரம்பரைச் சிறப்பு

ஸ்ரீ தேசிகன் தமக்குக் கிடைத்த ஆசார்ய பரம்பரையைப் பற்றியும் ஆசார்ய ஸம்பந்தத்தைப் பற்றியும் தம் மகிழ்ச்சியை வெளியிடும்போது கர்மத்துக்கு வசப் பட்டுள்ள தமக்கு நல்வழி காணமுடியாத விலங்கு முதலிய பிறவியைத் தராமல் சாஸ்த்ரத்துக்குப் படிந்து நற்பணிகளைச் செய்து உய்வதற்கு ஏற்ற மானிடப் பிறவியை அளித்ததற்கும், அதிலும் நாஸ்திக வகுப்பில் தோற்றுவிக்காததற்கும், வைதிகப் பெயர் பூண்டு ப்ரஹ்மத்தின் உண்மை நிலையை மட்டும் பற்றி அனாத்தை யும் பொய்யாகக் காணும் வகுப்பில் தம்மைப் பிறப்பியாததற்கும், எம்பெருமானரிட

மிருந்து மடைப்பள்ளியாச்சான் வழியாக வரும் ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த பிறவியை அருளி அவருக்குக் கொள்பேரனான அப்புள்ளார் திருவடிகளில் சேர்த்து உ-ஜ்ஜீவிக்க வழிகாட்டியதற்கும் மிக மகிழ்ந்து எம்பெருமானுக்கு நன்றியறிவித்துப் பேசியருளியுள்ளார். அம்முறையைத் தழுவி வில்லிவலம் ஸ்வாமியும் தம்மைச் சிறந்த ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்தவராக ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் செய்தருளியதை நினைத்து மகிழ்ச்சிகொண்டு பேசுவதுண்டு. இன்றுவரை நாற்பத்தினான்கு யதீச்வரர்களை ஆசார்யர்களாகப் பெற்ற ஸ்ரீ ஸந்நிதி பரம்பரையில் ஸ்ரீமத் ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனே ப்ரதமாசார்யனாக விளங்கியபோதிலும் அவருக்கும் ஆச்ரமத்தை அளித்த முதல் ஆசார்யன் அழகியசிங்கனே. முந்திய யுகத்தில் அழகியசிங்கன் என்று முதன்முதலாக அவனுக்குத் திருநாமமிட்டவர் திருமழிசைப் பிரான். அவர் 'நரசிங்கனே அழகியவன், அவனே பரமபுருஷன்' என்று முடிவு கூறி அவன் திருமேனியைக் கண்டு வியந்து அவன் திருவடிகளையே சரணமடையும்படி உலகுக்கு உபதேசிக்கின்றார். நம்மாழ்வாரோ எல்லா வஸ்துக்களுக்கும் தான் அந்தர்யாமியாயிருத்தலைக் கண்கூடாகக் காட்டிய நரசிங்கன் பெருமை தம் சிந்தனைக்கு எட்டாததென்று கூறி ஒய்ந்தார். இவ்வாறு தனிப் பெருமை பெற்ற திருநரசிங்கன் யதீச்வரர்களாகவே இருந்து தன்னை ஆராதித்து ஆசார்யகம் செய்வதற்குப் பாங்காக ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ப்ரதாயத்தைத் தோற்றுவிக்க ஸங்கல்பித்தான். அதில் முதல் ஆசார்யனை நியமிப்பதற்கு ஒரு மஹானைக் கண்டுவிட்டான். எவ்வகைக் குறையுமின்றிப் பரிபூர்ண அதிகாரியாய் விளங்கிய ஓர் உத்தம ப்ரஹ்மசாரியைத் தேர்ந்தெடுத்தான். ப்ரஹ்மசர்யத்திலேயே இருந்த அவரை அவ்வாச்ரமத்துக்குப் பெரும்பாலும் ஒத்த ஸந்ந்யாஸாச்ரமத்தில் புகச் செய்வதில் பொருத்த மிகுதியைக் கண்டான். அந்த மஹானுக்குத் தானே தன் கையாலேயே ஸந்ந்யாஸத்தை அளிக்க விரும்பினன். அதற்குத் தகுதிபெறத் தானே யதி வடிவு கொண்டு தம் திருவாயினால் ப்ரேஷ மந்த்ரத்தை உபதேசித்துத் தன் திருக்கையாலேயே காஷாயம்-த்ரிதண்டம் முதலிய திருச்சின்னங்களை அளித்து அம்மஹாபுருஷரை முதல் ஆஸ்தானாதிபதியாக்கித் தானும் அர்ச்சா மூர்த்தியான நம்மாழ்வாரைக்கொண்டும் ஸ்ரீமத் ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்ற திருநாமத்தையும் இட்டருளி வாழ்த்தினன் நாம ரூப வ்யாகரண சக்தனை திருநரசிங்கன். அன்று தொடங்கி இன்றளவும் யதீச்வரர்களாலேயே அந்த மஹாஸம்ப்ரதாயம் மேன்மேலும் பெருகி வளர்ந்து பிரகாசிக்கின்றது. அருளிச் செயலின் பகுதியில் பங்குகொண்டு சிங்கவேள் குன்றமெனும் திவ்ய தேசத்து எம்பெருமானை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தானே ஆஸ்தானத்தில் ஆராத்யதைவமாய் அமர்ந்து ஸ்ரீமத் அழகியசிங்கர்களால் பரிவுடன் ஊட்டப்பெற்ற உணவினால் உடல் பூரித்து வளர்ந்து நிற்கின்றனன். திருநரசிங்கன் தம்மை இத்தகைய மஹா ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்தவராகச் செய்தருளியதில் வில்லிவலம் ஸ்வாமி மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்வது உசிதம்தானே!

32. ஆசார்ய ஸம்பந்தத்தில் தம் பாக்ய விசேஷ உணர்ச்சி

தமக்குச் சிறந்த ஆசார்யர்கள் வாய்த்த பெருமையை நினைந்து ஸாத்துவிக அஹங்காரத்தைக் கூட உள்ளத்துக் கொண்டு பூர்வாசார்யர்களும் பெருமிதத்தோடு பேசுவதுண்டு. வில்லிவலம் ஸ்வாமி தமக்குக் கிடைத்த ஆசார்ய ஸம்பந்தத்தை நினைந்து உளம் மகிழ்ந்து அம்மகிழ்ச்சியை வெளியிடுவதும் உண்டு. ஸ்ரீ அஹோபில திவ்யாஸ்தானத்தில் 41-வது பட்டத்தை அலங்கரித்துப் பரமைகாந்தி ஸார்வ பௌமராய் இளமை முதலே உதயோபஸ்தானம் தவறுத அநுஷ்டாந சீலராய் ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலும் ஸித்தாந்தார்த்தங்களிலும் தாம் இட்ட வழக்காம்படி மேலே சிந்தனைக்கு இடமில்லாதவாறு ஒப்பற்ற ஜ்ஞாநத்தைப் பெற்று ஆயிரக் கணக்கான சிஷ்யர்களுக்கு உபதேசித்துப் பரிபூர்ண ஆசார்யகம் செய்துகொண்டு விளங்கிய காருகுறிச்சி ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவடிகளை ஆச்ரயித்து அந்தக் கடாக்ஷத்தால் ஜ்ஞாந ஸம்பாதநமும் உபாயாநுஷ்டாநமும் தமக்கு வாய்த்ததைச் சிந்திக்கும்போது வில்லிவலம் ஸ்வாமியின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி எழும். பின் ஆசார்யகத்துக்கு வேண்டிய ஸகலாம்சங்களும் பொருந்தி எம்பெருமானரது அபராவதார மென்னலாம்படி நிஷ்டாஸம்பூர்ணராய் ஸ்ரீபாஷ்ய வநத்திலேயே தம் வாழ்நாள் முழுதும் உல்லாஸ ஸஞ்சாரம் செய்யும் ஸிம்ஹமாய் விளங்கிய இஞ்சிமேடு ஸ்ரீமத அழகியசிங்கரது திவ்யாநுக்ரஹத்துக்குப் பாத்ரமாகி அந்தத் திருவாக்கினல் அதிகரணஸாராவளி–ச்ருதப்ரகாசிகாதிகளுடன் தெவிட்டாத ஸ்ரீ பாஷ்யாம்ருத ரஸத்தை ஊட்டி வளர்க்கப்பெற்ற மஹா பாக்யத்தைச் சிந்தித்து ஆநந்தக் கடலுள் மூழ்கி நிற்பவர் வில்லிவலம் ஸ்வாமி. இதனிலும் பெரும்பேறு இல்லையென ஸ்வாமியின் உள்ளக்கிடக்கை.

33. இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர்-பரமதநிரஸநமும் ஸ்வ மத ரக்ஷணமும்

இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் தம் பூர்வாச்ரமத்திலும் ஆஸ்தாநத்தை அலங்கரித்த பின்பும் நம் ஸித்தாந்தத்தையும் ஸம்ப்ரதாயத்தையும் பாதுகாப்பதற்கு வாதங்கள் மூலமாகவும் வியாசங்கள் வாயிலாகவும் கிரந்தங்கள் இயற்றியும் செய்த மஹோபகாரங்களை நாடு முழுதும் நன்கு அறியும். எத்தனையோ சிஷ்யர்களுக்கு அத்யாத்ம ப்ரவசநம் செய்து வழிப்படுத்தி அவர்களைப் பெரிய வித்வான்களாக உருவாக்கியருளிய பெருமை வியப்புக்கு உரித்து. உலகில் சில பிறமதத்தினர் ஆக்ரஹத்துக்கு உள்ளாகி 'வாய் உளது' என்ற பலத்தை மட்டும் கொண்டு சில இழிவான வாதங்களை எழுப்பி நம் ஸித்தாந்தத்தைக் கண்டித்து விட்டதாய்க் கூறிப் பாமரர்களை மயக்குவதுண்டு. நம் ஸித்தாந்தத்தைச் சேர்ந்த சில மஹான்கள் மனம் கொதித்து எழுந்து அவர்களின் வாதங்களைச் சுருதிகளைக் கொண்டும் மற்ற ப்ரமாணங்களைக் கொண்டும் கண்டித்து நம் ஸித்தாந்தத்தின் ஆழ்ந்த தத்துவங்களை விளக்கி அவர்கள் செருக்கை அடக்கி நம் ஸித்தாந்தத்தைக் காப்பதுண்டு. பூர்வ பக்ஷங்களும் கண்டநங்களும் கிரந்தங்களாகவே அமைவதும் உண்டு. சில

வித்வான்கள் பிற மதத்தினர் த்வேஷத்தால் நம் ஸித்தாந்தத்தில் குறை கூறி வெளியிடும் நூல்களைக் கண்ணோடுத்தும் பாராமல் நம் ஸித்தாந்த ப்ரவசநத்தில் மட்டும் வைன்றி நம் ஸித்தாந்தத்தை ரகஸித்துக்கொண்டு பகவத் குணாநுபவத்தில் மண்டியிருப்பதும் உண்டு. இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் முதல் வகுப்பைச் சார்ந்து பிறர் வாதங்களையோ நூல்களையோ கண்டித்துத் தீர்த்தே நம் ஸித்தாந்தத்தைப் பாதுகாக்கும் திருவுள்ளங்கொண்டு அதில் முழு வெற்றி கண்டருளியவர். ஒரு நிகழ்ச்சி-த்வைத மதம் நம் ஸித்தாந்தத்துடன் சில முக்கியக் கொள்கைகளில் ஒற்றுமையுடையதென்றும் நம் மதத்தோடு சற்று நெருங்கியதென்றும் ஸ்ரீ தேசிகன் தாமே காண்கின்றார். அந்த ஸித்தாந்தத்தில் உத்தராதி மடத்தில் பல்லாண்டு கட்கு முன் ஆஸ்தாநாதிபதியாய் ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலும் வேதாந்தத்திலும் சிறந்த ஜ்ஞாதாவாய் வாக்யார்த்தங்கள் நடத்துவதில் மிகச் சதுரராய் இருந்து பிரகாசித்த ஸ்ரீ ஸத்யத்யாந தீர்த்த ஸ்வாமிகளுடன் இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் வாதம் செய்ய நேர்ந்து அதில் முழு வெற்றியும் தாமே கொண்டு ப்ராமாணிகரான அந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் பாராட்டுக்கும் மதிப்புக்கும் இலக்காகிப் போற்றப் பட்டதை அனைவரும் அறிவர். ஸித்தாந்த விஷயமாகவும் ஆசார அநுஷ்டாந விஷயமாகவும் பல கிரந்தங்களை ஸ்ரீமத் அழகியசிங்கர் இயற்றியருளி உலகுக்குச் செய்த உபகாரமும் பாராட்டலைப் பெற்றது. இங்ஙனம் பரமதநிரஸநத்திலும் ஸ்வபக்ஷ ஸ்தாபநத்திலும் உலகுக்கு மஹோபகாரம் செய்தருளிய இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபத்தைக் கசடறச் செய்து ஸித்தாந்த நிர்ணயம் பெற்ற பெருமையை நினைத்து வில்லிவலம் ஸ்வாமி பெருமகிழ்ச்சி கொள்வது மிகப் பொருந்தும்.

31. இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரின் மூன்று அம்சத் திட்டத்தில் முழுமையான அந்வயம்

பல் வகைகளிலும் லோகத்துக்கு மஹோபகாரம் செய்தருளிய பின்பும் இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவுள்ளத்தில் மூன்று அம்சங்கள் கொண்ட திட்டங்கள் முக்கியமாய் இடம் கொண்டன. (1) வேதாந்த சாஸ்த்ரத்தில் தேர்ச்சி பெற்ற வித்வான்களை ஆண்டுக்கு ஒரு முறையாவது கூட்டித் தாம் கடாக்ஷித்துத் திருவுள்ளம் உகந்து வேதாந்த விசாரம் செய்வித்து அவர்களைச் சிறப்பித்து அநுக்ரஹிக்க வேண்டுமென்று ஓர் ஆஸ்தை தோன்றியது. அழகியசிங்கனும் அந்த மநோரதத்தைப் பூர்த்தி செய்ய முற்பட்டான். ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ் உருவாகி அதில் நடக்கும் அத்யாத்ம சர்ச்சைகளைக் கண்டு ஸ்ரீமத் அழகியசிங்கரும் அழகிய சிங்கனும் உள்ளம் பூரித்தனர். அன்று அந்த ஆசார்ய சிரேஷ்டரால் பெற்றெடுக்கப்பெற்ற ஸதஸ் இப்பொழுது நம் ஸ்ரீமத் அழகியசிங்கர் திருக்கைகளால் தொடங்கிய திருக்கோபுரம் நாளுக்கு நாள் வளர்ந்து வருவது போல் மேன்மேலும் வளர்ந்து வருகின்றது. வில்லிவலம் ஸ்வாமி இந்த ஸதஸ்ஸுக்களில் தவறாது அத்வயித்து விசேஷ சர்ச்சைகளில் முழுப்பங்கு கொண்டு தாமும் மகிழ்ந்து மற்றவர்களையும் களிப்புறச் செய்துவந்தார். (2) ஸ்ரீபாஷ்யகாரருக்குப் பெரிய நம்பிகள்

பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துவைத்த புண்ணியத் தலமாய்ப் பல மஹான்கள் இன்புற வாழுமிடமாய்ச் சக்கரவர்த்தித் திருமகள் பிராட்டியோடு அர்ச்சைத் திருமேனி கொண்டு விளங்கும் இடமான ஸ்ரீமதுராந்தக க்ஷேத்திரத்தில் ஒரு சாஸ்த்ர பாடசாலை அமைத்து அதனின்று வேதாந்த சாஸ்த்ர க்ரந்தத்திற்குச் சாதனமான ஸாமான்ய சாஸ்த்ர க்ரந்தத்தைப் பெறும் இளைஞர்களான பல வித்வான்களைத் தோற்றுவிக்க வேண்டுமென்று திருவுள்ளம் ஸ்ரீமத் அழகியசிங்கரிடம் உருவாகியது. ப்ரஸித்த பண்டிதர்களான பல ஆசிரியர்களைப் பெற்ற பாடசாலை சிறந்த முறையில் உருவாகிச் செயல்பட்டு வருகின்றது. அது மற்றும் சில ஊர்களில் தன் கிளைகளை ஏற்படுத்திக்கொண்டு நிமிர்ந்து நிற்கின்றது. இப்பாடசாலைகள் இப்பொழுதைய ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவுள்ளப் பாங்கினாலும் வளர்ந்து ஒப்பற்ற நிலை பெற்று விளங்குவதைக் கண்ணாரக் கண்டு மகிழ்கின்றோம். ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலையில் இருபத்தைந்து ஆண்டுகட்கு மேல் வில்லிவலம் ஸ்வாமி ஆசிரியராய் அமர்ந்து பல வித்வான்களை உருவாக்கிய பெருமையை ஸதஸ்ஸுக்களில் வந்து வேதாந்த சர்ச்சை செய்யும் பல வித்வான்களைக் கண்டு உணரலாம். (இ) ஸ்ரீ ஸ்ரீநிவி விருந்து நெடுங்காலத்துக்கு முன் அவதரித்து உலகுக்கு விசேஷ க்ரந்தத்தை ஊட்டி வந்த வேதாந்த தீபிகையென்னும் பத்திரிகையைப் பின்னும் சிறந்த முறையில் தோற்றுவித்து ஆஸ்திகர்களுக்கு உபகாரத்தைப் பெருக்கவேண்டுமென்று ஸ்ரீமத் அழகியசிங்கரின் திருவுள்ளத்தில் ஓர் அபிலாஷம் உதித்தது. உடனே ஸ்ரீ நரஸிம்ஹன் எதிரே தோன்றிப் பிராட்டியைக் கண்முன் காட்டினான். அவள் திருநாமத்தாலேயே பத்திரிகை 'ஸ்ரீ நரஸிம்ஹப்ரியா' ஆகிவிட்டது. இது தொடக்கத்திலேயே ஸ்ரீமத் அழகியசிங்கர் திருமேனியை நம் கண் முன் நிறுத்தி அந்தத் திருவாக்கினின்று எழும் அருள் மொழிகள் என்னும் திவ்யாம்ருத தாரையால் ஆஸ்திகர்களை ஈரமாக்கிப் பின்னும் வித்வான்களின் உயரிய விசாரங்களை ஏந்திக் கொண்டு ஒப்பற்று விளங்குவதைக் காண்கின்றோம். நம் வில்லிவலம் ஸ்வாமி அந்த ப்ரியாவில் நெடுங்காலமாக இடையறாது மலர்தோறும் உரைவழியும் வியாசங்கள் வடிவிலும் உபதேச வடிவிலும் பல கட்டுரைகளை வரைந்து படிப்பவர்களின் உள்ளத்தைக் குளிரச் செய்து வந்தார். ஆகவே இந்த மூன்று நிலைகளிலும் வில்லிவலம் ஸ்வாமி முழுத்தொடர்புகொண்டு பெருந்தொண்டு செய்து ஸ்ரீமத் அழகியசிங்கர் நியமனத்தை வெற்றியுடன் தலைக்கட்டி மஹோபகாரம் செய்தருளினர்.

35. இப்பொழுதைய ஸ்ரீமத் அழகியசிங்கரின் விசேஷ கடாக்ஷம்

இப்பொழுது 44வது பட்டத்தில் ஸ்ரீ அஹோபில திவ்யாஸ்தானத்தை அலங்கரித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அழகிய சிங்கரது திவ்ய கடாக்ஷமும் வில்லிவலம் ஸ்வாமிபால் பெருக்கெடுத்து ஓடியது. அன்று பால்யம் முதல் இன்று வார்த்தகம் வரை ஸ்ரீ பாஷ்யமென்னும் ஆராவமுதக் கடலுள் ஆழ்ந்து யதேஷ்ட ஸஞ்சாரம் செய்யும் தனி ஆற்றலுடன் விசேஷஜ்ஞாநநிதியாய், வைராக்ய அநுஷ்டாநங்களுக்கு உறைவிடமாய், பிறர் பசி காணாத உள்ளப் பாங்கைப் பெற்றுக்

கர்ணனையும் வெல்லச் செய்யுமாறு பெருஞ்செல்வத்தை அள்ளி அள்ளி வழங்கும் பரமௌதார்யத்துக்கு எல்லை நிலமாய், தம் மேம்பாட்டை மறந்து பாமரர்களுடனும் கலந்து பரிமாறி நல்லுரை கூறித் திருத்திப் பணிகொள்ளும் ஸௌசீல்யக் கடலாய், இப்பொழுது திருவரங்கன் நேரில் பேசி நியமித்த கோபுர நிர்மாண கைங்கர்யத்தைத் தலைக்கட்டுதற்கு அவன் திருவடி நிழலிலேயே எழுந்தருளியிருந்து அந்தக் கைங்கர்யத்தையும் தம் கடமையாகிய ஆசார்யகப் பணியையும் குறைவின்றி நடத்திக் கொண்டு ஸ்ரீமத் அழகிய சிங்கர் பிரகாசிப்பது உலகமறிந்த விஷயம். இந்த ஆசார்ய ஸார்வ பௌமருக்குத் தமது சிரமத்துக்குச் சற்றே பரிஹாரமாக வில்லிவலம் ஸ்வாமிக்கு ஸந்ந்யாஸாச்ரமத்தை அருளி ஸ்ரீ மாலோல திவ்யாராதநாதிகளில் உற்ற துணையாக்கிக் கொண்டு படிப்படியாய் ஆஸ்தான நிர்வாஹத்தில் பரிசயம் செய்து வைக்கக் குளிர்ந்த திருவுள்ளம் உதித்தது. முன்பு அஹோபில யாத்ரையில் வில்லிவலம் ஸ்வாமியையும் உடன் வருமாறு நியமிக்கும்படியிருந்தது. புதிய ஆச்ரமத்துக்குத் தகுதியை அருள்வதற்கு ஏற்ற இடம் அஹோபில க்ஷேத்ரமே என்று திருவுள்ளம். ஆழ்வார் 'சிங்கவேள் குன்றம்' என்று ஸ்ரீந்ருஸிம்ஹனுக்கு மூலஸ்தாநம் என்ற கருத்து விளங்கத் திருநாமமிட்ட மஹா புண்ய ஸ்தலம் அது. அங்கு ஸ்ரீ மாலோலன் தேஜோராசியாய் நிற்கும் திவ்ய ஸந்நிதி. ஸ்ரீ ஸந்நிதியில் எழுந்தருளியிருந்து நிர்வாஹத்தைச் சிறப்புறச் செய்தருளும் உத்ஸவ ந்ருஸிம்ஹனும் மூலவர் திருமேனியருகில் எழுந்தருளச் செய்தாயிற்று. இத்தகைய ஒப்பற்ற சூழ்நிலையில் ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஸந்ந்யாஸம் ஏற்பதற்கு முக்கிய பூர்வாங்கமாக வில்லிவலம் ஸ்வாமிக்கு ப்ரேஷ மந்த்ரத்தை உபதேசித்தருளியாயிற்று. மேலும் பரமக்ருபையோடு ஸ்ரீமாலோலனுக்குத் திருவாராதநம் செய்து பழகுமாறும் நியமித்தாயிற்று. வில்லிவலம் ஸ்வாமியும் ஸ்ரீமத் அழகிய சிங்கர் திவ்ய கடாக்ஷத்தின் விளைவான மஹாபாக்யமாகக் கருதிப் பெரு மகிழ்ச்சியுடன் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் திருவாராதனத்தை நடத்தி வந்தார். இந்த ஸ்வாமி செய்யும் திருவாராதந ரீதியைக் கடாக்ஷித்தருளி ஸ்ரீமத் அழகியசிங்கரும் திருவுள்ளம் மிக உகக்க வாய்த்தது. நான்கு ஆண்டுகட்கு முன் ஸ்ரீமத் அழகியசிங்கர் பம்பாய் நகரின் பிரார்த்தனையை ஏற்று அங்கே எழுந்தருளி ஸ்ரீமாலோல ஸதஸ்ஸையும் நடத்தியருளும்படியிருந்தது. ஸ்ரீமத் அழகியசிங்கர் வில்லிவலம் ஸ்வாமியை அப்பொழுதே ஸந்ந்யாஸாச்ரமத்தை ஏற்றுக்கொண்டு துணை புரியும்படி வலியுறுத்தியே நியமிக்கும்படி நேர்ந்தது. அந்த நியமநத்தை வில்லிவலம் ஸ்வாமி தம் முடிமேல் ஏற்று இசைந்த போதிலும் சற்றே காலம் கடந்து அந்த நியமநத்தைத் தலைக்கட்டுவதாய் விண்ணப்பம் செய்தார். ஸ்ரீமத் அழகியசிங்கரும் இளகிய திருநெஞ்சோடு தம் நிர்ப்பந்தத்தைச் சற்றே தளர்த்திக் கொள்ளலாயிற்று. பின் ஸ்ரீ ந்ருஸிம்ஹனே தன் ஸங்கல்பத்தை மாற்றிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகிவிட்டது. அதுவும் அவன் திருவுள்ளம்.

36. ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி

நம் வில்லிவலம் ஸ்வாமிக்கு அறுபது ஆண்டுகள் நிறைவுறும் ஸமயம். ஷஷ்டியப்த பூர்த்தியைத் தம் வாழ்நாளில் ஒரு சிறந்த மங்கள கார்யமாகக் கொண்டு

பாமரமக்கள் கூட உறவினர்களைக் கூட்டி இதை இரண்டாவது விவாஹ மங்கள மாகவே கருதிப் பெருஞ்சிறப்புடன் நடத்திக் கொள்வதை உலகில் காண்கின்றோம். மஹாஜ்ஞானிகளான பரமைகாந்திகள் இதைச் சாஸ்த்ரீயமான கடமையாகக் கருதாது ஆடம்பரத்தில் நோக்கற்றவர்களாய்ப் பெருவிழாவாக நடத்திக் கொள்வதில்லை. ஆனால் அவர்களிடம் ஞானம் பெற்ற சிஷ்யர்களும் பெருமதிப்புக்கொண்ட நண்பர் களும் அன்பு கொண்ட உறவினர்களும் கூடி அவர்களை வலியுறுத்தித் தங்கள் கடமையாக அவ்விழாவை நடத்த அநுமதி பெற்று நன்கு நடத்தி மகிழ்வதைக் காண்கின்றோம். அந்த நிலையே உருவாகியது நம் வில்லிவலம் ஸ்வாமிக்கு. ஆடம் பரமான எந்தச் செய்கையிலும் ஸ்வாமிக்கு நோக்கு இல்லை. விளம்பரங்களால் பொருள் ஈட்டுவதை முதன்மையாகக் கொண்டு சில வியாசங்களை ஏந்திக் கொண்டு இந்நாளில் வெளியாகும் மலர்களைப் போல் தமக்காக ஒரு மலர் பிறப்பதிலும் அதில் சிலர் தம்மைப் புகழ்ந்து வரையும் வியாசங்களில் அகப்படுவதிலும் வில்லிவலம் ஸ்வாமிக்குக் கருத்துச் செல்லவில்லை. ஸாதாரணமாகச் சாஸ்த்ரம் அநுமதித்த அளவில் தினந்தோறும் ஆஜ்ஞாகைங்கர்யமாய் நடக்கும் பகவதாராதனத்துடன் ஜந்ம நக்ஷத்ரத்துக்காகத் தம் திருமாளிகையிலேயே தனியாக அர்க்யாதிகள் ஸமர்ப் பித்தலாகிய அநுஜ்ஞாகைங்கர்யத்தைச் செய்து அந்தரங்கமாக ஷஷ்டியப்த பூர்த்தியைப் பெயரளவில் செய்து விடலாமென்றே ஸ்வாமியின் கருத்து. ஆனால் ஸ்வாமியின் ஆப்தர்களும் மதிப்புக்கொண்ட நல்லோர்களும் ப்ரவசநத்தில் அந்வயித்த சிஷ்யர்களும் இந்த உத்ஸவத்தை மிக்க விபவத்துடன் நடத்த விழைந்து அதற்காகப் பொருள் ஈட்டவும் தொடங்கினர். இதனை அறிந்த ஸ்வாமி சிறிதும் உடன்படாது அச்செயல்களை உடனே நிறுத்திவிடும்படி நிர்ப்பந்தமாய்க் கூறி விட்டார். முனைந்து நின்ற ஆஸ்திகர்கள் ஸ்வாமியின் திருவுள்ளத்தை மீறமுடியாது தவித்தனர். ஆனால் ஸ்ரீ நரஸிம்ஹன் திருவுள்ளம் வேறுக இருந்தது. அவன் தன் பிரியையுடன் ஏகாந்தத்தில் சிந்தித்து இவ்வுத்ஸவத்தை நிகழ்த்துவதாக ஸங்கல்பித்து அவள் வாயிலாகவே இச்செய்தியை வெளியிட்டுவிட்டான். ஸ்வாமிக்கு முன்னமே தெரிந்திருந்தால் இதையும் தடை செய்திருப்பாரோ? ஸ்ரீநரஸிம்ஹப் பிரியாவில் வெளிவந்த இந்த நன்மங்களச் செய்தியைப் பார்த்ததும் ஸ்வாமியின் ஆடம்பரமற்ற அமைதித் தன்மைக்குக் கட்டுப்பட்டிருந்தவர்களுக்கும் உத்ஸாஹம் பொங்கியது. பல ஆஸ்திகர்கள் பெருமகிழ்ச்சியுடன் ஷஷ்டியப்த பூர்த்திக்காக ஸ்வாமிக்குத் தெரியாமலே பெருநிதி திரட்டிவிட்டனர். ஸ்வாமியின் செவிக்கு இது எட்டிவிட்டது. ஒருவர் இருவரானால் வில்லிவலம் ஸ்வாமி மறுக்கவும் துணிவார். 'பாகவதாராதநத்துக்காக எம்பெருமான் அருளிய நிதி' என்று ஸ்வாமியிடம் ஸமர்ப்பிக்கத் துணிந்தனர். ஸ்வாமிக்கு ஸங்கடமான நிலைமை. ஐந்து நாள்கள் வேதத்தில் தேர்ந்த பாகவதோத்தமர்களைக் கொண்டு வேத பாராயணமும் ஸ்ரீமத் ராமாயணாதி படனமும் பாகவதாராதநமும் நடத்த வேண்டு மென்று வலியுறுத்துகின்றனர். இந்த நற்காரியங்களை வேண்டாமென்று மறுக்க முடியுமா? அவர்கள் நிகழ்த்தும் முறையை ஸ்வாமி மறுக்க முடியாமல் இசைய வேண்டியதாயிற்று.

37. முக்கூரில் ஷஷ்டியப்தபூர்த்தி வைபவம்

இந்த மஹோத்ஸவத்தை ஸ்ரீமத் அழகிய சிங்கர் திருமுன்பே அந்தத் திவ்ய கடாக்ஷத்தை முன்னிட்டு அந்தப் பரமானுக்ரஹத்துடன் நடத்துவதானால் ஸ்வரூபானுகுணமென்று ஸ்வாமி இசைந்திருக்கக் கூடும். அப்பொழுது ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஸ்ரீ மாலோலனுடன் அஹோபில நகர வாஸிகளின் பாக்ய விசேஷத்தின் விளைவாக அங்கே எழுந்தருளியிருந்த ஸமயம். வில்லிவலம் ஸ்வாமிக்கு அப்பொழுது அஹோபிலத்துக்குச் செல்ல முடியாத சூழ்நிலை. கடைசியில் ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹன் தன் யுக்தியைப் பயன்படுத்தி ஸ்ரீமத் அழகிய சிங்கர் வாழ்ந்தருளும் இடமாய்ப் புண்ணியத்தலமாய் மதிக்கப்படும் முக்கூர் ஸ்ரீ கிராமத்திலேயே ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவத்தை நடத்துமாறு ஸங்கல்பித்துவிட்டான். பின்னும் கூறவேண்டுமோ? மஹோத்ஸவம் தொடங்கி ஐந்து நாள் நடக்கின்றது. எங்குப் பார்த்தாலும் வேதாத்யயநபரர்களான பாகவதர்களின் கோஷ்டி. இடையிடின்றி வேத சப்தங்கள் மதுரமாய்ச் செவியில் விழுந்து கொண்டேயிருக்கின்றன. ஒரு புறம் ஸ்ரீமத் ராமாயணாதி இதிஹாஸ படநம். பரத்வாஜ ஆதித்யம் போன்ற பாகவதாராதநம். அப்பொழுதும் இந்த விபவங்கள் தமக்காக நடப்பதான உணர்வின்றி நல்ல கார்யங்கள் நடப்பனவான மகிழ்ச்சி மட்டுமே ஸ்வாமிக்கு. அஹோபிலத்திலிருந்து சிங்கவேள் குன்றுடையானுடைய திவ்ய கடாக்ஷங்களும் ஸ்ரீமத் அழகிய சிங்கர் திவ்யானுக்ரஹ தாரைகளும் வந்து விழுந்து கொண்டேயிருக்கின்றன. ஸ்ரீமத் அழகிய சிங்கர் நேரில் எழுந்தருளியிருந்து அநுக்ரஹிப்பதான உணர்ச்சியே வில்லிவலம் ஸ்வாமிக்கும் மற்றுமுள்ளோர்க்கும் உள்ளத்தில் தோன்றி மகிழ்விக்கின்றது. இத்துணை விபவத்துடன் வில்லிவலம் ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் அநல ஆண்டு ஆடி மாதம் பூராடத் திருநட்சத்திரத்தில் (7—8—76) முக்கூர் ஸ்ரீகிராமத்தில் நடந்தேறியது. வந்திருந்த நல்லோர்கள் தங்கள் மனோரதம் ஈடேறிய மகிழ்ச்சியுடன் மங்களம் பாடிவிட்டு ஊருக்குத் திரும்பினர்கள். அடியேனுக்கும் ஒரு பாக்யம் நேர்ந்தது. ஸ்வாமியின் பெருமையைப்பற்றி அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டியவளவுக்கு ஸ்ரக்தராவ்ருத்தத்தில் ஆறு சுலோகங்களையும் அதே கருத்துடன் அநுஷ்டுப்ராசிரிய விருத்தத்தில் தமிழில் ஆறு வாழ்த்துப் பாக்களையும் இயற்றி அச்சிட்டு ஸ்வாமியிடம் ஸமர்ப்பித்துச் சிறியதோர் தொண்டாற்றின மன நிறைவைப் பெற்றுத் தந்யனானேன்.

38. கிரந்தங்கள் இயற்றல்

வித்வான்கள் இயற்றும் கிரந்தங்களில் பல வகை உண்டு. சில கிரந்தங்கள் ஸித்தாந்தத்தின் தத்துவத்தை உணர்த்தத் தோன்றுவன. சில கிரந்தங்கள் நம் ஸித்தாந்தத்தில் பிறர் குற்றம் கூறுவதைக் கண்டித்து உண்மையுணர்த்துவன. நம் வில்லிவலம் ஸ்வாமி தம் கூரறிவைப் பயன்படுத்தி இருவகையிலும் கிரந்தங்களை இயற்றியுள்ளார். ஸ்ரீ தேசிகன் மத்வ மதத்தின் கொள்கைகளில் சில நம் ஸித்தாந்தத்துக்கு முரண்பட்டிருந்தாலும் 'ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை' என்ற முக்கியக்

கொள்கையில் வேற்றுமையின்மையால் அந்த மதத்தை நம் மதத்துக்கு நெருங்கிய தாய் வெளியிட்டருளினார். அந்த மதத்தில் தோன்றிய மத்வ சந்த்ரிகை என்ற நூலுக்கு மறுப்பாக 'மத்வ சந்த்ரிகா மோஹாபோஹம்' என்னும் கிரந்தத்தைத் தோற்றுவித்து உண்மை நிலையை விளக்கியுள்ளார் வில்லிவலம் ஸ்வாமி. 'தத்த்வ மார்த்தாண்டவிமர்சநம்' என்ற நூலுக்குக் கண்டநமாகத 'தத்த்வ மார்த்தாண்ட விமர்ச விதூநநம்' என்ற நூலை இயற்றி அதன் ஆராய்ச்சியை உதறித் தள்ளினார். ஸ்ரீமத் ராமாயண தனி சுலோகியை வடமொழிப் படுத்தி விளக்கி வடநாட்டாரும் அதன் ஸாரத்தை அறிந்து ரஸிக்க வகை செய்தருளினார். அத்வைத ஸித்தாந்தத்தில் கரை கண்டவராய் அத்வைத ஸித்தி முதலிய நூல்களை இயற்றிப் பெரும் புகழ் படைத்தவரான மதுஸூதந ஸரஸ்வதியின் 'அத்வைத ரத்நரக்ஷணம்' என்ற பெருநூலுக்கு ஒரு கண்டந நூல் இயற்றும்படி ஸ்வாமிக்கு வாய்ப்பை அளித்தான் எம்பெருமான். 'நம் ஸம்ப்ரதாயத்தில் மஹா வித்வானாய்ப் புகழ் பெற்றுச் சாஸ்த்ர ஸித்தாந்த நூல்கள் பலவற்றை இயற்றி ஸம்ஸ்கிருதத்துக்கும் நம் ஸித்தாந்தத்துக்கும் பல விசேஷத் தொண்டுகள் புரிந்து கீர்த்தி சேஷராய்ப் பிரகாசிக்கும் பண்டித ராஜ திருவரங்கம் ஸ்ரீ உப. திருமலை தாதாசார்யர் ஸ்வாமி (D. T. ஸ்வாமி) வில்லிவலம் ஸ்வாமியையே உரிய அதிகாரியாகக் கண்டு அழைத்துப் பரம கிருபையோடு மதுஸூதந ஸரஸ்வதியின் அந்தக் கிரந்தத்துக்குக் கண்டநம் எழுதும்படி நியமித்தார். அந்த ஸ்வாமியின் நியமநத்தை மகிழ்வுடன் ஏற்று 'அத்வைத ரத்ந தத்த்வ பரீக்ஷா' என்னும் ஒரு பெரிய கிரந்தத்தை வில்லிவலம் ஸ்வாமி இயற்றினார். இந்தக் கிரந்தங்களெல்லாம் பகவத் ஸங்கல்பத்தால் அச்சில் ஏறிய பின்பே அவற்றின் பெருமையை உணர்ந்து ரஸிக வித்வான்கள் ஸாரார்த்தங்களை அநுபவிக்க இயலும். காசியில் ஸ்வாமி இருந்த போது காசி விச்வ வித்யாலயம் வெளியிடும் மாதமலர்களில் அவர்கள் வேண்டுகோளின் பேரில் வெளியான 'உபாதாநதாத்ரிவேணீ' 'ப்ரதிபிம்ப தத்த்வ விமர்சம்' 'நத்வ ப்ரயோஜகத்வ விசாரம்' முதலிய தலைப்புக்களில் பல வியாசங்கள் எழுதியதை அங்கு உள்ளார் அநுபவித்து மிக மிகப் போற்றியுள்ளனர்.

39. மணிப்ரவாள நடையின் தோற்றம்

ஸ்ரீ தேசிகன் சாஸ்த்ரங்களில் தேர்ந்தவர்களுக்கு மட்டுமன்றி ஸாமாந்ய அதிகாரிகளுக்கும் பயன்பட்டு அதனால் அவர்கள் நல்வாழ்வு பெறுதற்காகச் சேதநர்கள் முக்கியமாய் அறிய வேண்டிய மூன்று தத்துவங்கள் – மூன்று ரஹஸ்யங்கள் இவற்றின் விளக்கத்தை மணிப்ரவாள நடையில் பல ரஹஸ்யங்கள் வாயிலாகச் செய்தருளினார். மணிப்ரவாளமென்பது வடமொழியும் தமிழும் கலந்த ஓர் அழகிய படைப்பாகும். இதை முதன்முதலாகப் படைத்தவர் எம்பெருமானுக்கு நேர்ச் சிஷ்யரான திருக்குருகைப் பிரான் பிள்ளானென்னும் ஆசார்யன். ஸ்ரீ பாஷ்யகாரர் நியமனத்தால் திருவாய்மொழிக்கு மணிப்ரவாள நடையில் திருவாருயிரப்படி யென்னும் வியாக்கியானத்தை அவதரிப்பித்து ஸ்ரீ பாஷ்யகாரர் ஸந்நிதியில் கடாக்ஷிக்கச் செய்து அவர் திருவுள்ளம் மிக உகந்த பின் அவர் நியமநத்தாலே

உலகுக்கு இந்த ஸ்லோக்தியை அளித்தருளினார் பிள்ளான். இதற்கு முன் மணிப்ரவாள நடையில் ஒரு கிரந்தமும் தோன்றியதாய்த் தெரியவில்லை. பின் அவதரிக்கப்போகும் பல்வேறு வியாக்கியாதங்களுக்கும் இதுவே வழிகாட்டியதென்பதை மறுக்க முடியாது. அவருக்குப்பின் பல ஆசார்யர்கள் இம்முறையைப் பின்பற்றி மணிப்ரவாள நடையிலேயே பல ஸ்லோக்திகளைத் தோற்றுவித்தார்கள். இந்த நடை ஸம்ப்ரதாயத்தில் மிக்க செல்வாக்குப் பெற்று விளங்குகின்றது. எல்லாச்சாதியிலும் உள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும் காலக்ஷேபம் செய்யவும் அநுபவிக்கவும் பாங்கானவை ரஹஸ்யங்கள் முதலிய மணிப்ரவாள ஸ்லோக்திகள். எல்லோருக்கும் பயன்படும்படி ஸ்ரீ தேசிகன் ரஹஸ்யங்களை அருளிச்செய்துவரும்போது பரமதபங்கம் என்ற ரஹஸ்யக்ரந்தமும் ஸ்வாமி திருவாக்கினின்று அவதரித்தது. இது மிகவும் விரிவான ரஹஸ்யமாகும்.

40. பரமதபங்க ரஹஸ்யத்தின் அமைப்பு

இந்த ரஹஸ்யத்தின் அமைப்பைப் பேசுவோம். முதலில் திருவயிந்தை தெய்வ நாயகனுக்கு மங்களாசாஸநமாக ஓர் அநுஷ்டுப் சுலோகம். பின் ஸ்ரீ தேசிகன் பிற மதங்களைக் கண்டிக்கும் ஆற்றலைத் தமக்கு அருளும்படி எட்டுத் திருக்கைகளுடன் விளங்கும் திருவாழியாழ்வானைப் பிரார்த்திக்கின்றார். எந்தச் செயலிலும் வெற்றி காண்பதற்குத் திருவாழியாழ்வானை முதலில் வேண்டுவது முன்னோர்களின் மரபு. பின் ஆசார்யர்கள் செய்தருளிய உபகாரத்தை அநுஸந்திக்கின்றார் ஸ்ரீ தேசிகன். பின் நம் ஸித்தாந்தத்தைத் தழுவிச் சேதநம் – அசேதநம் - ஈச்வரன் ஆகிய மூன்று தத்துவங்களையும் விளக்குகின்றார். பிறமதக் கொள்கைகளைக் கண்டிப்பதன் அவசியத்தை விளக்கி அவற்றில் பொதுப்படையாக உள்ள தோஷங்களைக் காட்டுகின்றார். பின் சார்வாக மதம் - நால்வகை பௌத்த மதம் – அத்வைத மதம் - ஜைந மதம் - பாஸ்கர யாதவ மதம் - வையாகரண மதம் - கணாதமதம் - பாசுபதமதம் ஆகிய வற்றின் முக்கியக் கொள்கைகளைக் கூறிக் கண்டித்துப் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தின் பெருமையைப் பேசிச் சரணாகதியின் ஸ்வரூபத்தை விளக்கி நம் ஆசார்யர்கள் வழியாக வரும் ஸம்ப்ரதாயமே சிறந்ததெனக் கூறி முடிவில் இவ்வாறு பிற மதங்களின் கண்டநத்தை முழுவெற்றியுடன் தலைக்கட்டித் தந்த திருவாழியாழ்வானுடைய பதினாறு திருக்கைகளையும் போற்றி இந்த ரஹஸ்யக் கிரந்தத்தைப் பூர்த்தி செய்தருளுகின்றார் நம் தேசிகன். ரஹஸ்ய க்ரந்தங்களின் முறைப்படி இந்த ரஹஸ்யத்திலும் ஒவ்வோர் அதிகாரத்தின் முதலிலும் இறுதியிலும் அதன் கருத்து அடங்கிய பாசுரங்களை அருளிச் செய்துள்ளார். அந்தப் பாசுரங்கள் மட்டும் பரமத பங்கம் என்ற பெயருடன் ஸ்ரீ தேசிகப் பிரபந்தத்துள் ஒரு ப்ரபந்தமாக வழங்கி அநுஸந்தாநத்திலும் இருந்து வருகின்றது.

41. பரமதபங்கம் கடினமான ஸ்ரீஸூக்தி

இந்த ரஹஸ்யம் மணிப்ரவாள நடையில் அவதரித்திருந்த போதிலும் இதன் கடினத்தன்மை அளவிட முடியாததாகும். தர்க்கம் முதலிய ஸாமாந்ய சாஸ்த்ரங்களில் தேர்ச்சி பெற்று வேதாந்தத்திலும் ஆழ்ந்து புகுந்தவர்க்கே இந்த ரஹஸ்

யத்தை ஸேவித்து விஷயங்களை அறிந்து இன்புற முடியும். இந்தக் கிரந்தத்தை ஸ்வாமி தேசிகன் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே அவதரிப்பித்திருந்தால் ஸர்வார்த்த ஸித்தி — ந்யாய ஸித்தாஞ்ஜநம் — சததூஷணி முதலிய கிரந்தங்களின் வரிசையில் சேர்ந்து அவற்றைக் காட்டிலும் கடினமென்ற பெயரையும் வாங்கிக்கொண்டு விசேஷ ஜ்ஞாநவான்களுக்கே பயன்பட்டுக் கொண்டிருக்கும். அந்தக் கிரந்தங்களைப் போலன்றி இந்தக் கிரந்தத்தை மட்டும் மணிப்ரவாள நடையில் அருளிச் செய்த காரணத்தை அவசியம் அறிய விரும்புமவர் நெடுங்காலத்துக்குப் பின் என்றுவது ஒருநாள் நித்ய விபூதிக்குச் செல்லும்போது அங்கே நித்ய ஸூரிகள் – முக்தி பெற்றவர்கள் கோஷ்டியில் தலைமை தாங்கிப் பரிபூர்ண பகவதநுபவத்தில் மண்டியிருக்கும் ஸ்ரீ தேசிகனையே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் இயலும். மணிப்ரவாளம் என்ற பெயருடன் இருப்பதை நினைத்து ஸாதாரண அதிகாரிகள் பரமத பங்கத்தைக் கையில் எடுத்துப் பார்த்தால் அவர்களுக்கு விளங்குவது ஒவ்வொரு பதத்தின் இறுதியில் உள்ள தமிழ் விகுதியேயாகும். இதன் கடினத் தன்மையால் மற்ற ரஹஸ்யங்களைப் போல இது ப்ரவசநத்திலும் ப்ரசாரத்திலும் அகப்படாமல் சற்று மறைந்தே நின்றது என்னலாம். சில பாமரர்கள் இதனைப் பரமபதபங்கம் - பரமபங்கம் - பரமார்த்த பங்கம் என்றெல்லாம் கூட வழங்கத் தொடங்கிவிட்டனர். முன்னோர்களான பல மஹான்களும் இதற்கு வியாக்கியாதம் இயற்ற வாய்ப்புப் பெறவில்லை.

12. பரமதபங்கத்தின் விரிவுரைப் படைப்பு

இப்பொழுது இதற்கு விரிவான ஓர் உரை தோன்றவேண்டுமென்று ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹன் ஸங்கல்பித்தான். ஸ்ரீ உப. D.T. தாதாசார்ய ஸ்வாமியின் மநோரதமும் நியமநமும் நம் வில்லிவலம் ஸ்வாமிக்கு ஊக்கமளித்தது. ஸ்ரீ உப. உத்தமூர் அபிநவதேசிக ஸ்வாமியிடம் ஸம்பூர்ணமாக க்ரஹித்த ந்யாய சாஸ்த்ரத்தின் உதவி அத்புதமான ஒரு வியாக்கியாநத்தைத் தோற்றுவிக்கக் காரணமாய் நின்றது. எல்லோரும் மூலநூலின் கருத்தைத் தெளிவாய் எளிதில் அறிந்து கொள்ளுமாறு உரை இயற்றுவதில் எத்துணைக் கஷ்டங்கள் உள்ளனவென்பது நல்லுரையாசிரியர்களுக்கே தெரியும். மூலநூல்களைச் சுதந்திர முறையில் படைப்பதில் அவ்வளவு சிரமம் ஏற்படுவதில்லை. இந்தச் சிரமத்தைத் திருவுள்ளத்துக் கொண்டே ஸ்ரீ தேசிகன் தாம் அருளிய கடினமான சில கிரந்தங்களுக்கு உரையிடும் பொறுப்பைப் பிறரிடம் அளிக்கத் திருவுள்ளம் கொள்ளாது தாமே உரையையும் இட்டருளினார். மணிப்ரவாளம் என்ற பெயரில் மிகக் கடினமாய் அமைந்து விட்ட பரமத பங்கத்துக்கு விரிவுரை படைக்கப் புகுந்தவர் நம் வில்லிவலம் ஸ்வாமி. பல பெரியோர்களின் நியமநத்தையும் ஆப்தர்களான ஸுஹ்ருத்துக்களின் ப்ரார்த்தனையையும் காரணமாகக் கொண்டு இந்த ஸ்வாமி தொடங்கிய இத்தக் கைங்கர்யம் சிறந்த முறையில் பூர்த்தி ஆவதற்கு விசேஷ காரணம் ஒன்று உண்டு. ஸ்ரீ நரஸிம்ஹன் ஸங்கல்பத்தைத் தழுவிய தம் ஸங்கல்பத்தாலோ தம் அநுக்ரஹ விசேஷத்தாலோ தொடங்கும் எந்த நற்காரியமும் முழு வெற்றி காண்பதில் சிறிதும்

ஞானியின் என்று உலகுக்கு உறுதியாய் உணர்த்திய ஆசார்ய ஸார்வ பௌமராய் இப்பொழுது ஆஸ்தானத்தை அலங்கரிக்கும் ஸ்ரீமத் அழகியசிங்கரின் பரமானுக்ரஹ விசேஷமே இவ்வுரையின் வெற்றிக்கு முதற் காரணமாகும். பரிபூர்ண கடாக்ஷத் தோடும் திருவுள்ளத்தின் உகப்பு மிகுதியாலும் அவதரித்த ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீமுகமே இதற்குச் சான்று.

43. உரையில் அமைந்த சிறப்புக்கள்

உரையின்தான் எத்தனைச் சிறப்பு அம்சங்கள் நிறைந்துள்ளன! பிறர் மதங்களைக் கண்டிக்கும் ப்ரகரணங்களுக்கு உரைவிடும்போது அந்தந்த மதத்தினர் நூல்களிலின்று ப்ரமாணங்களைத் தேடி எடுத்துக் காட்டியிருப்பது சிறந்தி அம்சம். மூலத்தின் ஒவ்வொரு வாக்யத்துக்கும் ஏற்ற அவதாரிகை கொடுத்திருப்பது அர்த்த ஞானத்துக்கு மிக உபகாரகமாயுள்ளது. ஸ்ரீ தேசிகன் பொருத்தியுள்ள பதங்களுக்கு உரிய ப்ரயோஜனங்களைக் கொடுப்பதிலும் உரையில் குறை வைக்கவில்லை. மூலத்தின் ஒவ்வொரு வாக்யத்துக்கும் ஸ்வாமியின் கருத்தை விளக்கியிருப்பதும் உள்ளத்தைக் கவர்கின்றது. சில இடங்களில் மேல் ஆக்ஷேபங்களையும் எழுப்பிச் சர்ச்சை செய்து உரிய வேதாந்தத்தைத் திரப்படக் கூறியிருப்பது அரும்பெருஞ் செயலாகும். ஓர் உரைக்கு இன்னும் என்ன அம்சம் வேண்டும்? இந்த வியாக்யானத்துக்கு 'ஸ்ரீ தேசிகாசய ப்ரகாசம்' என்று பெயரிட்டதும் மிகப் பொருத்தமானது. வில்லிவலம் ஸ்வாமி இந்த உரைக்கு அந்தப் பெயர் இட்டுவிட்டதால் ஸ்ரீ தேசிகன் கருத்துக்களை இந்த உரையில் தானாக வந்து பொருந்தினவா அல்லது ஸ்ரீ தேசிகன் கருத்துக்களை இதில் அப்படியே பிரதிபலிப்பதைக் கண்டு அப்பெயரிட்டாரா என்ற சங்கைக்கு இருவகையும் பொருந்தலாமென்பதே விடை.

44. வில்லிவலம் ஸ்வாமியின் முன்னுரை

பகீரதன் அரும்பாடுபட்டுக் கங்கையைக் கொண்டுவந்து நமக்குக் கொடுத்தான். வில்லிவலம் ஸ்வாமி பல்லாண்டுகள் கங்கைக் கரையிலேயே வாழ்ந்து சாஸ்த்ரப்ரவசந உபந்யாஸாதிகளால் பெருகேற்றப் பெற்ற தம் மேதா விலாஸத்தைக் கொண்டு உருவாக்கிய பரமதபங்க வ்யாக்யான க்ரந்தத்தைத் தாம் ஒரு பகீரதனாயிருந்து கங்கை வெள்ளமாகவே கொண்டு வந்து நம்மை அநுபவித்து நீராடச் செய்கின்றார். தம் புத்திக்கும் சரீரத்துக்கும் அளவற்ற காரியத்தைக் கொடுத்துப் பெருந்தொண்டில் ஒடுபட்டதில் ஆரோக்யம் குறைந்து திருமேனி நலிவுற்ற போதிலும் அதனைப் பொருட்படுத்தாது மனக்கருத்துடன் பூர்த்தி செய்தார். இப்பொழுதைய ஸ்ரீமத் அழகியசிங்கர் தம் மூலதாரத்துக்கு ஏற்பச் செய்தருளிய விசேஷ தரமான உபகாரத்தாலும் மற்றும் பல ஆஸ்திகர்களின் பொருளுதவியாலும் பத்து அதிகாரங்கள் வரை உள்ள வியாக்கியானப் பகுதியை முதற் பாகமாக அச்சிடுவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. அதில் வில்லிவலம் ஸ்வாமி தாமே விரிவான ஒரு முன்னுரையை வெளியிட்டுள்ளார். அதில் பல விஷயங்களுக்குக்

கொடுக்கும் விளக்கத்திலிருந்து ஸ்வாமியின் ஆத்ம குணம்-ஞானம்-முக்கியமாய் அடக்கம்-பணிவு-இந்த மஹா கைங்கர்யத்தில் சிரத்தை எல்லாவற்றையும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம். மேலும் அதில் நம் சீர உபாதி-அச்சுகளில் உள்ள குறை முதலியவற்றால் சில அச்சுப் பிழைகள் நேர்ந்துவிட்டதற்கு மனம் நொந்து தம் வாயால் கூறுணம் கேட்கின்றார். முதற்பாகம் அமைந்ததில் விஸ்விவலம் ஸ்வாமிக்குப் பூர்ண திருப்தி இல்லையாயினும் விஷயங்களில் குறையின்றி நல்ல முறையில் அமைத்து விட்டதில் மனமகிழ்வு ஏற்பட்டது.

45. ஸ்வாமியின் பிரிவு-இளவலின் பொறுப்பு

முதற் பாகத்தில் பத்து அதிகாரங்களின் உரை பூர்த்தி பெற்றது. எஞ்சிய பதினொரு அதிகாரங்களுக்கும் வியாக்கியானம் இரண்டாவது பாகமாக வெளிவர வேண்டும். இத்தப் பாகத்தை மிக்க கவனத்துடன் பரிபூர்ண சோதனம் செய்து எக்குற்றமும் இன்றி வெளியிட ஸ்வாமி மனோதம் கொண்டிருந்தார். ஆனால் சரண்யன் திருவுள்ளம் வேறுவிதமிட்டது. இதுவரை வெளிவராத முறையில் பரமத பங்கத்துக்கு ஒரு வியாக்கியானம் தோன்றிவிட்டதிலும் அதிலும் முதற்பாகம் வெளிவருவதிலுமே திருப்தியடைந்த பரமபதநாதன் நித்ய விபூதியில் தன் பரிபூர்ண அநுபவத்தை அளிக்க விரும்பி விஸ்விவலம் ஸ்வாமியை அழைத்துக்கொண்டு விட்டான். ஸ்வாமி இந்த லீலாவிபூதியில் இன்னும் சிலகாலமாவது வாழ்ந்திருந்தால் ஸித்தாந்தத்துக்கும் ஸம்ப்ரதாயத்துக்கும் மேலும் எத்தனை உபகாரங்கள் கிடைத்திருக்குமென்பதையும் ஸ்வாமியின் எதிர்பாராத பிரிவால் நம் தர்சநத்துக்கு எத்தகைய இழப்பு நேர்ந்துவிட்டதென்பதையும் சிந்திக்கும்போது நம் உள்ளம் வெதும்புகின்றது. ஸ்வாமியின் பிரிவுத் துயரைச் சற்றே குறைத்துக் கொள்வதற்கும் பரமத பங்கத்தின் இரண்டாம்பாகம் வெளிவருவதற்கும் ஒரு வழி கண்டு நமக்குக் காட்டியுள்ளான் எம்பெருமான். ஸ்ரீமத-அதுஷ்டாநாதிகளிலும் வியாக்கியானம் தோற்றுவிப்பதிலும் உபந்யாஸங்கள் செய்வதிலும் பெரும்பாலும் விஸ்விவலம் ஸ்வாமியையே தழுவிய இளவலான விஸ்விவலம் கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி தம் திருத்தமையனார் செய்த கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்வது தம் கடமையெனக்கொண்டு பரமதபங்கத்தின் இரண்டாம் பாகத்தைக் கத்தமான வகையில் அழகாய்ப் பிறப்பித்துள்ளார். முதற்பாகத்தில் எதிர்பாராது நேர்ந்துவிட்ட சிறு பிழைகளுக்கும் இடமின்றிச் சீரிய முறையில் சோதித்து வெளியிடுவது உலகுக்குப் புரியும் மஹோபகாரம்.

46. பரமதபங்கம் இரண்டாம் பாகம் வெளியீடு

இப்பொழுது பரமதபங்கம் இந்த அபூர்வ வியாக்கியானத்துடன் இரண்டாவது பாகம் வெளிவருவதற்கு முக்கிய காரணம் இப்பொழுதைய ஸ்ரீமத் அழகிய சிங்கர் நியகடாகூ பூர்வமாய் விசேஷ தாய்யத்தை அநுக்ரஹித்ததே என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் விண்ணப்பம் செய்கின்றேன். இந்தக் கைங்கர்யத்தில் நம் ஸ்ரீமத் அழகியசிங்கருக்கு உள்ள திருவுள்ள உகப்பையும் இதன் அவசியத்தையும் நன்கு உணர்ந்து மற்றும் சில ஆஸ்திகர்களும் சிரத்தையுடன் தாய்யலாஹாயம் செய்ததும் இக்கைங்கர்யத்துக்குப் பயன்பட்டது. நம் ஸித்தாந்த அபிவிருத்தியில்

சிரத்தைகொண்டு இந்தக் கிரந்தத்தை அநுபவித்து இன்புறப் பாரிக்கும் அறிஞர் களுக்கும் சிரமமின்றி ஸ்ரீ தேசிகாசயத்தைக் கண்முன் காட்ட வல்ல இந்தக் கிரந்தத்தை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸங்கல்பமும் இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் இப்பொழுதைய ஸ்ரீமத் அழகியசிங்கர் ஆகிய இரண்டு ஆசார்ய ச்ரேஷ்டர்களின் திவ்யாநுக்ரஹமும் சேர்ந்து உருவாக்கின என்னுதல் மிகப் பொருந்தும். வில்லிவலம் ஸ்வாமி அரும்பாடுபட்டுத் தம் புத்தி சக்தியை விசேஷமாய் உபயோகித் துத் தோற்றுவித்த இக்கிரந்தம் ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயத்துக்கும் அதன்பின் ஸந்ததியாருக்கும் அளித்த ஒரு பெருஞ்சேமநிதியாகும். இக்கிரந்தத்தைப் படித்து உணரத் தமக்குத் தகுதியையோ தகுதிமின்மையையோ சிந்திக்காது ஸ்ரீ தேசிகனது இந்தத் திவ்ய ஸூக்தி உரையுடன் தம் கிருஹத்தில் இருப்பதுவே தங்களுக்கு க்ஷேமகரம் என்ற உறுதியுடன் ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவரும் இரண்டு பாகங்கள் கொண்ட இந்த ஸ்ரீ கோசத்தை வாங்கி கிருஹத்தை அலங்கரிப்பது ஒரு முக்கியக் கடமையாகும். தம் உடல் நலிவைப் பொருட்படுத்தாது தம் ப்ராணனைக் கையில் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் இக்கிரந்தத்தைப் படைத்துத் தந்துவிட்டுத் தம்மையே தியாகம் செய்த வில்லிவலம் ஸ்வாமி தம் புத்ர ஸ்தானீயரான திருத் தம்பியார் பெரு முயற்சியால் வெளிவரும் இரண்டாம் பாகத்தையும் சேர்த்துப் பூர்ணமாண இந்த ஸ்ரீ கோசத்தை நித்ய விபூதியில் ஸ்ரீ தேசிகன் திருமுன்பே பரமபதநாதனுகிய ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனிடம் ஸமர்ப்பித்துத் திவ்ய தம்பதிகளுடை யவும் நித்ய முக்தர்களுடையவும் பாராட்டைப் பெறுவாரென்பதில் சிறிதும் ஐயமில்லை.

47. ஒரு மஹாபாக்ய விசேஷம்

இங்குப் பரமபோக்யமான ஓர் அம்சம். இப்பொழுது ஆஸ்தானத்தில் ஆசார்ய ஸார்வபௌமராய் விளங்கும் ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவவதார நன்னாளும் ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ்ஸின் பூர்த்தி தினமும் நமக்கு நித்யாநுஸந்தேயமான ஸ்ரீராமாநுஜதயா பாத்ரத் தனியன் அவதரித்த நன்னாளுமாகிய ஆவணி ஹஸ்த மெனும் மஹாபுண்ய தினத்தில் வில்லிவலம் ஸ்ரீ உப. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி தம் திருத் தமையனாரின் விசேஷப் படைப்பான ஸ்ரீ பரமதபங்க வியாக்கியானத்தின் இரண்டாம் பாகத்தைப் பரம பக்தியுடன் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸந்நிதியில் ஸமர்ப்பித்துச் செய்யும் பிரார்த்தனைக்குத் திருவுள்ளம் உகந்து பரமாநுக்ரஹத்துடன் அந்தத் திருக்கைகளால் மஹா வித்வான்களின் முன்னிலையில் உலகுக்கு வெளி வருவதைக் காட்டிலும் மஹா பாக்யம் வேறு என்ன வேண்டும் ?

48. அடியேனது பூர்த்தியுரை

தம் சிறப்புக்களால் பல்வகையிலும் தம் திருத்தமையனாரை நினைவூட்டுமவராய், பல்லாண்டுகளாய் அடியேனுக்குப் பரம ஸுஹ்ருத் என்பதை வலியுறுத்த அடியே னது நலத்தையே முதன்மையாகக் கோருமவரான ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உப. வில்லிவலம் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி தாம் செய்துவரும் தொண்டுகளால் அவர் திருத்தமையனாரின் பிரிவுத்துயரைச் சற்றே மறக்கச் செய்

கின்றார். பரமத பங்க வியாக்கியான நிர்மாணத்தின் வாயிலாக வில்லிவலம் ஸ்வாமி செய்த மஹாகைங்கர்யத்தைப் பற்றி அடியேனே ஒரு வியாசம் வரையுமாறு ப்ரீதி பூர்வமான நியமநத்தைச் செய்தார் இளவல் ஸ்வாமி. அடியேன் ஸ்வரூபத்துக்கு ஏற்ற ஒரு கைங்கர்யமாகக் கொண்டு அடியேனது சிற்றறிவுக்கு எட்டினவளவுக்கு இதை வரைந்து குளித்துத் தாம் புரண்டிட்டோடித் தரங்க நீரடைக்கலுற்ற அணிலத்தின் உள்ளப் போக்கைப் பெற்று மகிழ்கின்றேன். ஸுஹ்ருத்தான இளவல் ஸ்வாமியின் நியமநத்தைத் தலைக்கட்டிய ஆத்ம திருப்தியைப் பெற்று க்ருதஜ்ஞனுய் க்ருதக்ருத்யனுய் க்ருதார்த்தனுகின்றேன்.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

துர்மதி-ஹ்
ஆவணி ஹஸ்தம்
1—9—81

அடியார்க்கடியன்
வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராமதேசிக தாஸன்
ஒப்பிலியப்பன் ஸந்நிதி

ஸ்ரீ உ.ப. வித்வன்மணி வேதாந்தவாவதூக வில்லிவலம், நாராயணஸார்ய ஸ்வாமியின்

ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம்

7—8—76 நள-ஹ் ஆடி-மீ 23உ பூராடம்

வாழ்த்துப்பா

[வங்கீபுரம், நவநீதம், ஸ்ரீராமதேசிகாசார்யன், ஒப்பிலியப்பன் ஸந்நிதி]

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

1 स्वस्ति श्रीमान् सुतेजाः सकलगुणगणैर्भूषितः शास्त्रवृन्दे
निष्कृष्टज्ञानपूर्णो विनयनिधिरसौ दिव्यमेधाविलासः ।
छात्राणां शास्त्रसूक्ष्मप्रवचनविभवात् विश्वविख्यातकीर्तिः
पूज्यो नारायणार्यो जगति बुधवरैर्माननीयः समिन्धे ॥

அறுசீராசிரியப்பா

1 பழமறையோர் வதியுமூராம் பழவேரி தனிலுதித்த பண்பா ளன்ருன்
விழுமியநற் குணச்சிறப்பு மிகுநாரா யணப்பெரியோன் மேதை மிக்கோன்
வழுவறுநற் கூரறிவும் சீரியநன் மனப்பாங்கும் திகழ நின்ருன்
வழிவழியா வைதிகநற் சந்ததிய னவன்பெருமை பேசப்போமோ ?

2 पूर्वं मालोलविद्वत्सदसि ननु महापण्डितानां समक्षं
श्रुत्यन्ते वीक्ष्य नारायणबुधवर! ते निस्तुलां वादशैलीम् ।
श्रीवण् श्रीरङ्गकारिप्रभवयतिवरा विस्मिताः प्रेमबद्धाः
वेदान्ते वावदूकं निरुपधिकृपया त्वां विधाय प्रहृष्टाः ॥

2 முன்பொராண்டில் மாலோலச் சபையதனில் முதறிஞர் குழுவின் முன்பே
அன்புருவன் சீரங்க சடகோப யதிராச ஆசான் ருனும்
இன்பமுற எழில்நாரா யணமணியே ! மறைமுடியில் வாதம் செய்நின்
பண்பதனைப் பார்த்துனக்கு வேதாந்த வாவதூகப் பேரிட் டானே.